விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 04 வெள்ளிக்கிழமை (20.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 'எங்கு போய் முறையிட்டாலும் நீதி கிடைக்கப் போவதில்லை'



## சரத் பொன்சேகா குமுறல்

(கொழும்பு)

எங்கு போய் முறையிட்டாலும் எனக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பது எனக்கு நூறு வீதம் தெரியும். அதுபற்றி எங்களுக்கு கவலை இல்லை. எது வந்தாலும் எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன் என ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைகளின்றி விளக்கமறியலிலுள்ள தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## ராஜன் ஆசீர்வாதம் கோரிக்கை

(கொழும்பு)

10 வருடங்களுக்கும் மேலாக வழக்கு தாக்கல் செய்யப்படாமல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்த ராஜன் ஆசீர்வாதம் தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே ராஜன் ஆசீர்வாதம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று (18ஆம் பக்கம் பார்க்க)

## பேருந்து மோதி யுவதி உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் மாவட்ட கச்சேரிக்கு முன்னால் நேற்று பேருந்து ஒன்றினால் மோதுண்டு தமிழ் யுவதி ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். கணேசபுரத்தை சேர்ந்த 22 வயதான நாகலிங்கம் லோஜினி என்ற யுவதியே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பலியானவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்துதொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## மேர்வினுக்கு மீண்டும் பதவி வழங்க ஆயிரத்து 500 பிக்குகள் சிபார்சு!

(கொழும்பு)

மேர்வின் சில்வா எம்.பியை மீண்டும் பிரதி அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று கம்பஹாவைச் சேர்ந்த ஆயிரத்து 500 புத்த பிக்குகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளார்கள்.

சமூர்த்தி அலுவலர் ஒருவரை மரத்தில் கட்டிப் போட்டார் என்கிற சம்பவத்தின் பின்னணியில் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் பதவியில் இருந்து மேர்வின் சில்வா ஜனாதிபதியால் நீக்கப்பட்டார்.

இந் நிலையிலேயே இப்பிக்குகள் மேர்வின் சில்வாவுக்கு மீண்டும் இப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று (18ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாயவின் சாட்சியத்துக்கு எம்மால் கருத்து எதுவும் கூறமுடியாது

## ஐ.நா. சபை தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உண்மையை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் அளித்த சாட்சியம் குறித்து கருத்து எதையும் வெளியிட முடியாது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கோத்தபாய தமது சாட்சியத்தின் போது இலங்கையில் பொதுமக்களின் பாதுகாப்புக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களை (18ஆம் பக்கம் பார்க்க)

## முச்சக்கர வாகனம் மோதி வயோதிபப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் முச்சக்கர வாகனம் மோதியதால் வயோதிபப் பெண் ஒருவர் பலியானார். இச்சம்பவம் நேற்றுமாலை 4.45 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதில் அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி சிவயோகம் (வயது 81) என்பவரே பலியானவர் ஆவார்.

நல்லூர் ஆலயத்துக்குச் சென்று விட்டு முற்சக்கர வாகனத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த அவர், ஸ்ரான்லி வீதியில் அவ்வாகனத்திலிருந்து இறங்கியபோது பின்னால்வந்தமற்றொரு முச்சக்கர (18ஆம் பக்கம் பார்க்க)

## கருணா ஊடாக அரசை உளவறிய விடுதலைப்புலிகள் முயற்சித்தனர்

## முன்னாள் பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உளவாளியாக கருணாவைப் பயன்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சி மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

கருணாவை அரசாங்கத்துடன் இணையச் செய்து அதன் மூலம் அரசாங்கத்தின் உள்விவகாரத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ்ச்செல்வன் அரசியல் துறைப் பொறுப்பாளராக கடமையாற்றிய காலத்தில் முயற்சிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் (18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு 61 சிங்கள மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

2009/2010 கல்வியாண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்வதற்கென 61 சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இவர்களில் 15 பேர் சட்ட பீடத்துக்கும் 14 பேர் மருத்துவ பீடத்துக்கும் தெரிவாகியுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு 60 பில்லியன் ரூபாய் நிதியுதவி தேவை

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் முழுமையான அபிவிருத்திக்கு 60 பில்லியன் ரூபாய் நிதி தேவையென ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சியாகோ யூசாவோவிடம் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சியாவோ யூசாவும் கலந்து கொண்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சியாவோ யூசாவோ நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.



நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட சியாவோ யூசாவோ யாழ். பொது நூலகத்தையும் யாழ்.கோட்டைப் பகுதியையும் பார்வையிட்டதுடன் மாலை 4.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

இவ் அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் திணைக்களப் பணிப்பாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக எடுத்துரைத்தனர்.

முக்கியமாக சுகாதாரம், கல்வி போன்றவற்றினை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் குடாநாட்டின் முழுமையான அபிவிருத்திக்கு 60 பில்லியன் ரூபாய் தேவை எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி உப தலைவரிடம் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பதாக அவர் தெரிவித்ததுடன், குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி தொடர்பாகப் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார். (ச-7)

## அனுமதி அட்டையை பெற்றுக் கொள்ளலாம்

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் தோற்றவுள்ள தரம் 12 ஐ பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு கிளிநொச்சி மத்திய கல் லூரியினூடாக விண்ணப்பித்த மாணவர்கள் அனுமதி அட்டைகளை அலுவலகத்தில் பெற்று பரீட் சைக்குத் தோற்றுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் கேட்டுள்ளார். (ச-3)

## உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணிக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில்,

நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி மோதவுள்ளதுடன் பிற்பகல் 4.30 மணிக்கு உரும்பிராய் சென். மைக்கல் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் அணி மோதவுள்ளது. (ச-6,24)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பொதுப் பட்டமளிப்பு - ஒக்டோபர் 2010

### அறிவித்தல்

மேற்படி விடயம் தொடர்பாக 13.08.2010 அன்று உதயன், தினக்குரல், வலம்புரி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்தில் முதலாவது பந்தியின் இரண்டாவது வசனத்தைக் கீழ்வருமாறு அமைத்து வாசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

***"பின்வரும் தேர்வுகளில் 2009, 2010 ஆம் ஆண்டுகளில் சித்தியடைந்து பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் 05.09.2010 க்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.***

***ஏற்கனவே 2010 மார்ச் 26,27,28 ஆம் திகதிகளில் நடைபெற்ற பட்டமளிப்பிற்குத் தகுதி பெற்றவர்கள் இப் பட்டமளிப்புக்குக் கருத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்"***

பதிவாளர்
19.08.2010

(C-897)

---

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF MEDICINE

### Academic Programme

The Introductory Programme for the New Batch of Medical Students (33rd - 2010) will recommence on 23.08.2010.

Registrar
19.08.2010

(C-898)

---


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

### மீண்டும் யாழில்

**20.08.2010 முதல் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.**

**பதிவுக் கட்டணம் ரூபா: 250/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாத விடாய்க் கோளாறுகள் , வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை , வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர ) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன்
(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C-888)


---


## மாபெரும் துவிச்சக்கர வண்டிப் போட்டி

த சாரிகா லேணர்ஸ் சாரதி
பயிற்சிப் பாடசாலையின் கிளிநொச்சிக் கிளை
திறப்பு விழாவினை முன்னிட்டு நடாத்தும் மாபெரும்

### துவிச்சக்கர வண்டிப் போட்டி

காலம் :- 26.08.2010 காலை 6 மணிக்கு
இடம் :- யாழ்.காரியாலயம்

துவிச்சக்கர வண்டிப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் உடனடியாகக் காரியாலயத்தில் பதிவினை மேற்கொள்ளவும்.

57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 5100200 / 021 3207740

குறிப்பு:- இருபாலாரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
பரிசு தொடர்பான விபரங்களுக்கு காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(2206)


---


## கண்ணீர் அஞ்சலி

மதிப்புக்குரிய
பிரபல தொழிலதிபர்
S.V. முருகேசு



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சரவணபவ தொலைத்தொடர்பு நிலையம்
பொலிகண்டி, கொற்றாவத்தை.

(C-899)


---




## முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

**ஸ்ரீராம சாஸ்திரி**
**0775183681, 0775183109**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்துதரப்படும்.

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்**

**K.R.V.INN,**
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் முன்பாக)

*கைரேகை பார்க்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்*

(2205)


---

## பெயர் மாற்ற அறிவித்தல்

உடுவில் வடக்கு, காளி கோவிலடியைச் சேர்ந்த **செல்வி நடராசா இராசகுமாரி** ஆகிய நான் எனது பெயரை **நடராசா பாமினி** என மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள
ந.இராசகுமாரி

(2203)

---




# இன்று ஒரு தகவல்

## இரு வழிப்பறிக் கொள்ளையர்கள்

வெளியூருக்குப் போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறோம். வழியில் காட்டுப்பாதை. மிகவும் இருட்டி விட்டது.

கையில் ஒரு "டோர்ச்லைற்" பிடித்துக் கொண்டு வழியைப் புரிந்து கொண்டு நடந்து வருகிறோம்.

திடீரென்று இரு வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் வந்து நம்மிடமிருந்த டோச்லைற் உட்பட எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள்.

அந்தச் சமயத்தில் நமக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்? அதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். எதற்கு நினைத்துப் பார்க்கச் சொல்கிறேன் என்றால்... அதே வேதனை நம்முடைய ஆன்மீகப் பயணத்திலும் ஏற்படுவதற்கான சாத்தியம் இருக்கிறது என்று சொல்கிறார்கள் பெரியவர்கள்.

ஏனெனில் ஆன்மீகப் பயணத்தின் நடுவிலும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் இருவர் வருவார்களாம். அந்த இரண்டு பேரும் யாரென்பதை இப்பொழுது புரிந்து கொள்வோம். ஆன்மீகப் பயணத்தில் நாம் ஒரு எல்லையை (மோட்சம்) நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

'விவேகம்' என்ற விலையுயர்ந்த பொருளை கையில் வைத்துக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம்.

அதைக் கொண்டுதான் சரி எது பிழை எது என்பதை இனங்கண்டு பயணத்தைத் தொடர முடியும்.

விவேகம் இல்லையெனில் நாம் அந்தப் பயணத்தைத் தொடர முடியாது. அப்படியிருக்கும் போது திடீரென்று இரண்டு கொள்ளைக்காரர்கள் குறுக்கே வந்து அந்த விவேகத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டால் என்ன ஆவது?

சரி,அந்த இரண்டு கொள்ளைக்காரர்களும் யார்?

ஒருத்தரின் பெயர் காமம்.அதாவது ஆசை. இன்னொருவரின் பெயர் குரோதம். அதாவது கோபம்.

ஆசையும் சினமும் சேர்ந்து தான் நம்மிடம் இருக்கும் விலையுயர்ந்த பொருளான விவேகத்தை பறித்துக் கொண்டு போய் விடுகிறது.

டோச்லைற்றைத் தவற விட்டு இருட்டில் முழித்துக் கொண்டு நிற்பது மாதிரி.

அதுவும் மிகவும் வேதனையைக் கொடுக்கக் கூடிய ஒரு விடயம்.

அதனால் தான் பெரியவர்களெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமாம்.

ஆசை–சினம் இது இரண்டும் மனதில் உண்டாகி விட்டதென்றால் அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விட வேண்டுமாம்.

வளரவிட்டால் ஆபத்து. அப்படிக் கிள்ளி எறிவதற்கு நாம் ஒரு கத்தியை உபயோகப்படுத்த வேண்டும். அந்தக் கத்திக்குப் பெயர் தான் புத்தி.

நாமெல்லாம் வழக்கமாக என்ன செய்கிறோம்? முதலில் கோபப்படுகிறோம். அதன்பின் வருத்தப்படுகிறோம். இனிமேல் கோபப்படக் கூடாது என்று நினைத்துக் கொள்கிறோம். இதே தீர்மானத்தை முன்னரே பண்ணியிருக்க வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்.

ஆசையையும் கோபத்தையும் ஆரம்பத்திலேயே எடுத்தெறியாவிட்டால் நம்முடைய மனோசக்தி குறைந்து கொண்டே போய்விடும். கடைசியில் நாம் மிருகங்களாகிவிடுவோம். இது பெரியவர்கள் நமக்குக் கொடுக்கும் எச்சரிக்கை. சிலபேர் எந்த சந்தர்ப்பத்திலேயும் கோபப்படுவதில்லை. அதைப் பார்த்துவிட்டு நாம் தப்பாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

விமான நிலையத்தில் ஒரு பயணி பணியாளரிடம் மிகவும் கோபமாக சண்டை போட்டுக் கொண்டிருந்தார். இந்தப் பயணி ஜப்பான் போக வேண்டியவர். அந்தச் சிப்பந்தி பயணிகள் கொண்டு வரும் பெட்டிகளை வாங்கி ஒழுங்குபடுத்தி விமானத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியவர். அந்தப் பயணி இந்த சிப்பந்தியை வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டிருந்தார். இவர் பதிலுக்கு கோபப்பட வேண்டுமல்லவா? கோபப்படவேயில்லை. மிகவும் பொறுமையுடன் புன்முறுவலுடன் அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். இது பார்ப்பவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

கொஞ்ச நேரத்தில் விமானம் வந்தது. இந்தப் பயணி புறப்பட்டுப் போய்விட்டார்.

அதற்குப் பின் ஒருத்தர் சிப்பந்தியைக் கூப்பிட்டார்.

"அந்த ஆள் அவ்வளவு கோபமாக திட்டினார். உங்களால் எப்படி சிரித்துக் கொண்டே பதில் சொல்ல முடிகிறது? உங்களுக்கு கோபமே வராதா?"என்று கேட்டார்.

"என்னுடைய சினத்தை நான் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டேன். அதைக் கையாளும் விதமே தனி" என்றார் அந்த ஆள். "அது எப்படி?" என்றார் இவர்.

"இப்பொழுது அந்தப் பயணி ஜப்பானுக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அவருடைய பெட்டி படுக்கையெல்லாம் அமெரிக்காவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது"என்று நிதானமாக பதில் சொன்னார் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையில் விரைவில் தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்

## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் விரைவில் தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கு தேவையான சட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் இதுவரை காலமும் தனியார் பல்கலைக்கழகங்கள் பதிவு செய்யப்படவில்லை எனவும் 78 கல்வி நிறுவனங்கள் கம்பனி சட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் பட்டங்களை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பதிவுசெய்யப்பட்டுள்ள 78 நிறுவனங்களில் 26 நிறுவனங்கள் மட்டுமே கல்விச் சேவையை வழங்குவதாகவும் ஏனையவை வெறுமனே பெயர்ப் பலகையை மட்டும் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டில் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் பற்றிய புள்ளி விபரங்கள் வெளியிடப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

(6-2)

# போக்குவரத்து அமைச்சின் செயலருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யதிட்டம்

## கெமுனுவிஜயரட்ண தெரிவிப்பு

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளது.

உரிய போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி கொழும்பு - யாழ்ப்பாணம் வீதியில் சேவையிலீடுபட தனியார் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கியமை தொடர்பிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அரசியல்வாதிகள் எவரும் தலையீடுகளை மேற்கொள்ளவில்லை எனவும் எதிர் கட்சியினரின் ஆதரவுடனேயே இந்த பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளனவா என்று சந்தேகம் எழுந்துள்ளதாகவும் கெமுனு விஜயரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

(6-4)

# இராசி பலன்

*20.08.2010*
*(ஆவணி 4, வெள்ளிக்கிழமை)*
*ஏகாதசி பிற்பகல் 4.57 மணிவரை*
*மூலம் பிற்பகல் 1.55 மணிவரை*
*இராகுகாலம் 10.35-12.05 மணிவரை*
*சுபநேரம் 6.05-7.35 மணிவரை*
*ஏகாதசி விரதம், வரலட்சுமி விரதம், அமிர்த சித்தம்.*

**மேடம்** தடைகள் அகன்று தனலாபம் பெருகும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மை கிடைக்கும், இழுபறியாக இருந்த காரியம் நிறைவேறும்.

**இடபம்** மனக்குழப்பம் அகல முருகனை வழிபட வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டு விலகும்.

**மிதுனம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், பெரியோரின் ஆலோசனை கிடைக்கும்.

**கடகம்** உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சிவாலய வழிபாடு சிறப்பினைத் தரும், சாதனை புரியும் நாள்.

**சிங்கம்** உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், வியாபார விருத்தி கருதி சில தீர்மானங்கள் எடுப்பீர்கள்.

**கன்னி** தொலைபேசி மூலம் ஆச்சரியமான செய்தி வந்து சேரலாம், பெற்றோரின் அரவணைப்பில் மகிழும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருட்கள் வாங்கும் சிந்தனையுண்டு.

**விருச்சிகம்** வாய்ப்புக்கள் வந்து சேரும் நாள், நண்பர்கள் மாலை நேரத்தில் நல்ல தகவல்களை கொண்டு வருவர், சொத்துக்கள் தொடர்பான முயற்சிகள் வெற்றியளிக்கும்.

**தனுசு** விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை எடுக்க வேண்டிய நிலை, காரிய வெற்றிக்கு முருகனை வழிபட வேண்டிய நாள்.


**மகரம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வீட்டை அழகு படுத்துவதில் கவனம் செலுத்துவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறும்.

**கும்பம்** உன்னதமான வாழ்க்கைக்கு அத்திவாரம் அமைத்துக் கொள்ளும் நாள், பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், தொழில் முன்னேற்றம் காணப்படும்.

**மீனம்** வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றியைத் தரும்.

வளவன்

# பேசும் படம்




காட்சி-முகமாலை

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் |
|---|---|---|
| 1 Kg | . ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 80 |
| தக்காளி | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 |
| கோவா | 80 | 80 |
| கரட் | 100 | 100 |
| பூசணி | 50 | 45 |
| புடோல் | 40 | 30 |
| வாழைக்காய் | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30-40 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 |
| பயற்றங்காய் | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 40 |
| கறிமிளகாய் | 70 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 80 |
| போஞ்சி | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20-25 | 15 |
| தேசிக்காய் | 70 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 25-35 |




முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான திட்டமிடல் நெறிமுறைகள் மூன்றுநாள் பயிற்சிப் பட்டறையின் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வட மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களப் பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலீசியன் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.கல்வி வலய கணக்காளர் எஸ். கமலரூபன் (இடது), யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக பொருளியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.உதயகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்ட நிகழ்சித்திட்ட உதவியாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## ஆன்மீக நிகழ்வுகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று முற்பகல் 10 மணிக்கு ‘தேவிபாகவதம்’ என்னும் விடயம் பற்றி பொருளியல் ஆசிரியர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖

வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று மாலை 7 மணிக்கு ‘விநாயகர் திருவுருவம்’ என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் சங்கச் செயலாளர் கந்த சத்தியதாஸன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

❖ ❖ ❖

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி இன்று வெள்ளிக்கிழமை ‘நாளறில் கண் இழந்து’ என்னும் விடயம் பற்றி ஆசிரியர் வை.நாகநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-29)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அனுசரணையுடன் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 6 ஆம் நாளான இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை செல்வி உதயதிவ்ய மணி மகாலிங்கம் (பாட்டு), ஏ.ஜெயராமன் (வய லின்), எஸ்.துரைராசா (மிருதங்கம்), செல்வன் ரி.வரோதயன்(கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்ச காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடத்தும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3மணிமுதல் 6மணிவரை ‘ திருவாசகம் என்னும் தேன்’ என்னும் விடயம் பற்றி ஆசிரியர் கு. பால சண்முகன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மஹாகணபதி, துணைவி அறநெறிப் பாடசாலை, அச்செழு சிவகாமி ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-4)

## கலந்துரையாடல்

(காரைநகர்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் கடமையாற்றும் அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களிற்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலிற்கு யாழ்.பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர்கள், தலைமையக முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட அனைத்து முகாமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (6-4-246)




## காரைநகரில் நடமாடும் சேவை

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த 17 ஆம்திகதி பிறப்பு, இறப்பு பத்திரம், திருமணப் பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவையொன்று நடைபெற்றது.

காரைநகர் பிரதேச செயலகத்தில் UNDP நிறுவன அனுசரணையுடன் தேசிய , மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட இந் நடமாடும் சேவையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த நடமாடும் சேவையில பொறுப்பான அதிகாரிகள், காரைநகர் செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் செயற்பாட்டினால் சுமார் 650 பேர் பயனடைந்தனர்.

இந்நிகழ்வின் போது, புதிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு 497 பேரும், இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு 29 பேரும் திருமண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு 103 பேரும், காலம் கடந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு 28 பேரும், காலம் கடந்த இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு 4 பேரும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் திருத்தம் செய்வதற்கு ஒருவரும் புதிய திருமணப் பதிவு பத்திரம் பெறுவற்கு 27 பேரும் தங்கள் விண்ணப்பங்களை வழங்கியுள்ளனர்.

மேற்குறித்த 650 பேரை தவிர்த்து, கடந்த நடமாடும் சேவையில் பயன் பெறாதவர்களுக்காக நாளை சனிக்கிழமையும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.(6-2-246)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்தின் இவ்வாண்டிற்கான 4ஆவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் யாழ்ப்பாணப் பிரதேச ஒருங்கிணை ப் புக் குழுத்தலைவருமான டக்ளஸ் தேவாணந்தா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திணைக்களத்தலைவர்களையும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் கேட்டுள்ளார். (6)

## பற்றையொன்றினுள் இருந்து அழுகிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு


(கரவெட்டி)

அல்வாய் மேற்கு ஞானசாரியார் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள பற்றை ஒன்றினுள் இருந்து அழுகிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. துன்னாலை மத்தியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி சிதம்பரப்பிள்ளை வயது 65 என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.


கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1மணிக்கு வீட்டை விட்டு சென்ற இவர் மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததையடுத்து குடும்பத்தினரும் உறவினர்களும் பிரஸ்தாப நபரை தேடி அலைந்தனர்.

இந்நிலையில் ஞானசாரியார் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள பற்றை ஒன்றினுள் துர்நாற்றம் வீசிய நிலையில் சடலம் ஒன்று கிடப்பதை அறிந்த உறவினர்கள் சடலத்தைக் கண்டபின் மேற்குறித்த நபரின் சடலம் தான் என்பதை அடையாளப்படுத்திய பின்னர் கிராமசேவையாளரிடம் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து கிராம சேவையாளர் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதை அடுத்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 3மணிக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சுப்பிரமணியம் நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-4-24)



யூனியன் அசூரன்ஸ் நிறுவனத்தின் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் வடமாகாண முகாமையாளர் சி.என்.மதிவதனன் உரையாற்றுவதையும் காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.பிரகாஷ் மரணமானவரின் மனைவிக்கு இழப்பீடு வழங்குவதையும் படங்களில் காணலாம்.



கேரதீவு -சங்குப்பிட்டி பாலத்திற்கான வேலைத்திட்டத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாண பிரதி பிரதம செயலாளர் இராசநாயகம் ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிடுவதையும் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் பாலத்தையும் 55 வீதம் பூர்த்தியடைந்த நிலையிலுள்ள பாலத்தையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:என்.குமார்)

# யாழ்.மாவட்ட கடைகளில் உத்தேச விலையை மீறி பொருட்களை விற்ற 102 பேர் பிடிபட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கடைகளில் உத்தேசிக்கப்பட்ட விலையை மீறி அதிக விலையில் பொருட்களை விற்பனை செய் பவர்கள் மீது பாவனையாளர் அலுவலர்கள் அதிகார சபை அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய கொழும்பில் இருந்து வந்த 5 அதிகாரிகள் கொண்ட குழுவொன்று கடந்த 2ஆம் திகதி இருந்து யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காலாவதியான பொருட்கள் உத்தேசிக்கப்பட்ட விலையை மீறி அதிகளவான விலையில் விற்பனை செய்தல், எலக்ரிக் பொருட்களுக்கு உத்தரவாத அட்டை வழங்காமல் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களில் நேற்று வரை 102 பேர் பிடிபட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இன்று நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இவர்களுள் அதிகளவானோர் யாழ்ப்பாணப் பகுதியில் பிடிபட்டுள்ளதுடன் 84 பேருக்கு எதிரான வழக்கு யாழ். நீதி மன்றத்திலும் 18 வழக்குகள் மல்லாகம் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே பாவனையாளர் அலுவலர்கள், அதிகாரசபை அதிகாரிகள் யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் தீவிரப்படுத்தி சட்டத்திற்கு எதிராக செயற்படுபவர்கள் மீது சட்ட வழக்கை மேற்கொள்ளப்படுவதுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களில் பாவனையாளர் அதிகார சபை விரைவில் திறக்கப்படும் என பாவனையாளர் அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் ஆர். ஏ.தர்மவர்தன தெரிவித்துள்ளார். (6-7)

## செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு கடந்த 15 ஆம் திகதி பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சரான கே.என்.டக்ளஸ் தேவானந்தா விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது ஆலய நிர்வாகத் தலைவர் சண்முக ஐயருடன் கலந்துரையாடி ஆலய குறைபாடுகளையும் தேவைகளையும் கேட்டறிந்தார்.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்தினரால் கோயில் தேவைக்காக கோவில் வீதியில் பரப்புவதற்கு 45 லோட் மணலும், புதிய மின் பிறப்பாக்கி ஒன்றும் கேட்கப்பட்டது. இதனை வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்து தருவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

அத்துடன் தொண்டைமானாறு செல்வச் சந்தியில் இருந்து ஆலயத்திற்குச் செல்லும் கடற்கரை வீதியை முற்றாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். அன்றைய தினம் பொதுமக்களும் தமது கோரிக்கை சிலவற்றை அமைச்சரிடம் முன் வைத்தனர். (6-2)

## கழிவகற்றும் நடவடிக்கை

(நல்லூர்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையிலுள்ள மலசலகூட குழியானது நீண்ட நாட்களாக சுத்திகரிப்பின்றி தற்போது நிரம்பி வழிந்து துர்நாற்றம் வீசுகிறது.

இதனை அடுத்து கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் கோப்பாய் லயன்ஸ் கழகத்தினரின் கவனத்திற்கு கொண்டு வந்தது. இதனையடுத்து அம் மலசலகூட கழிவுகளை அகற்றுவதற்குரிய செலவுகளை வழங்குவதற்கு கோப்பாய் லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

இதற்கான நடவடிக்கையை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்தியகலாநிதி லயன் வை. தியாகராஜா எடுத்துள்ளார். (6-2-134)

## அடிக்கடி பழுதடையும் நோயாளர் காவுவண்டி

(நல்லூர்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் உள்ள நோயாளர் காவுவண்டி அடிக்கடி பழுதடைவதால் அவசரநோயாளிகளை சிகிச்சை அளிப்பதற்கு வேறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்கு வருகை தரும் நோயாளிகள் பெரிதும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2-134)

மண்ணில் மறைந்தாலும் மனதில் நிறைந்திருக்கும்

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 28 06 1938



ஆண்டவன் அடியில் 20 08 2006

திதி-துவாதசி

மக்கள் சேவை மன்னன்

அமரர் சின்னத்தம்பி சிவமகாராஜா

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
இயக்குநர், நமது ஈழநாடு பத்திரிகை, சுரபி பதிப்பகம்.
தலைவர் ,காங்கேசன்துறை கிளை, செஞ்சிலுவைச்சங்கம்.

பசிக்கு உணவு கொடுத்தாய்
பார்வைக்கு மூக்குக் கண்ணாடி கொடுத்தாய்
வாழ்வதற்கு தொழில் கொடுத்தாய்
தர்மம் - சத்தியம் காப்பதற்கு உயிரைக் கொடுத்தாய்.

உன்பிரிவால் வருந்தும்
சகோதரர்கள். மருமக்கள். குடும்பத்தினர்.

(2196)

தற்காலிக முகவரி:-கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
நிரந்தர முகவரி:-கொல்லன்கலட்டி, தெல்லிப்பளை.

## வடமாகாண தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தைச் சேர்ந்த 200 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாகவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் வேண்டுகோளையடுத்து, தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் குறித்து பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் பேச்சுக்கள் நடத்திய போது வடமாகாணத்தில் உள்ள 200 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு என அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக தம்மிடம் அவர் கூறியதாகவும் அடைக்கலநாதன் கூறினார்.

வவுனியாவைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் இடையே சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சந்திப்பின் போது தாங்கள் இரண்டு வருடத்தில் இருந்து 9 வருடங்கள் வரையில் தொண்டர் ஆசிரியர்களாக கிராமப்புற பாடசாலைகளில் எதுவித வேதனமுமின்றி பணியாற்றி வருவதாகவும் இடப்பெயர்வை அடுத்து அனைத்தையும் இழந்துள்ள தங்களுக்கு வாழ்வாதார உதவியாக நிரந்தர நியமனம் பெற்றுத்தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரிடம் வவுனியா மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் உரிய மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தி தன்னால் முடிந்த நடவடிக்கை எடுப்பதாக செல்வம் அடைக்கலநாதன் இந்த ஆசிரியர்களுக்கு உறுதியளித்திருந்தார். அத்துடன் கொழும்பில் இந்த விடயம் சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்துவதற்கென இந்த தொண்டர் ஆசிரியர்களது பிரதிநிதிகளையும் அழைத்துச் சென்றிருந்தார்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களோடு பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமாகிய நாமல் ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து இது குறித்து பேச்சுக்கள் நடத்தியதாகவும் அதன் போதே அவர் 200 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறித்து தெரிவித்ததாகவும் அடைக்கலநாதன் கூறினார். (6-2)

### அடுத்தாண்டு முதல்

# சகல பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழி மூல போதனைகள்

(கொழும்பு)

சகல பல்கலைக்கழகங்களிலும் அடுத்தாண்டு முதல் ஆங்கிலமொழி மூலமே போதனைகள் நடத்தப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட ஐ.தே.க.எம்.பி தயாசிறி ஜயசேகர எழுப்பிய வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்தும் பதிலளிக்கை யில், அடுத்த வருடம் முதல் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் 99 சதவீதமான கற்கைநெறிகள் ஆங்கில மொழியிலேயே கற்பிக்கப்படும். அதனால் ஆங்கில மொழியறிவு போதியளவு தேவைப்படும். அதற்காக பட்டதாரி மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடத்தப்படும்.

அத்தோடு ஆங்கிலமொழியில் விரிவுரைகளை நடாத்த முடியாதுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு இந்தியாவின் உதவியோடு ஆங்கில மொழியறிவு பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கென ஆங்கில மொழி நிபுணர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படும் என்றார். (6-2)

# திருடர்களின் கைவரிசையால் அச்சத்தில் உறையும் மக்கள்

(கொழும்புத்துறை)

நல்லூர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் திருடர்கள் தொடர்ந்தும் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக வைமன்வீதி, செட்டித்தெரு வீதிகளில் கொள்ளைக் கும்பல்களின் நடமாட்டங்கள் இரவு வேளைகளில் காணப்படுகின்றது. இதனால் நல்லூர் பகுதி மக்கள் அச்சத்துடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14 ஆம் திகதி திருட்டுக் கும்பலின் கைவரிசையினால் 60 வயது மூதாட்டி ஒருவரும், 24 வயது இளம்பெண் ஒருவரும் வாள் வெட்டுக்கிலக்காகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளைமேற்படி பகுதிகளில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்படுமா என பாதிக்கப்பட்டவர்கள் அங்கலாய்க்கின்றனர். யாழ்ப்பாணத்தில் மீண்டும் வாள்வெட்டு கலாசாரம் பரவி வருவதால் பொதுமக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிப்பதாகக் கூறப்படுகின்றது. (6-4-51)

# கனடா சென்ற இலங்கையர்கள் தனிச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து 3மாத கப்பல் பயணத்திற்கு பின்பு கனடா சென்றுள்ள 490 இலங்கைத் தமிழர்கள் தற்போது தனியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கைதுசெய்யப்பட்டு விலங்கு மாட்டப்பட்டனர். பின் இவர்கள் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் 490 பேரில் 55 குழந்தைகளும், 63 பெண்களும் அடங்குவர்.

இதில் 6 குழந்தைகள் பெற்றோரை போரில் பறிகொடுத்தவர்களாகவும் 2 பேர் நிறை மாத கர்ப்பிணியாகவும் உள்ளனர்.

அவர்களை முகாமிற்குக் கொண்டு செல்லும் முன்பு கைதுசெய்வதற்காக பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

ஒரு பெண்ணிடம் விலங்கு மாட்ட கைகளை காட்டும்படி கூறியபோது, அந்தப் பெண் ஒருகையை மட்டும் காட்டினார். மற்றொரு கையை காட்டும்படி பொலிஸார் கூறியபோது, போரில் தனது கை துண்டிக்கப்பட்டு விட்டது என்று கண்ணீருடன் கூறினார்.

இதைக் கண்ட பாதுகாப்புப் படையினர் அந்தப் பெண்ணுக்கு விலங்கு மாட்டாமல் விட்டு விட்டனர். இதுபோன்று கப்பலில் வந்த ஒவ்வொரு தமிழரும் போரில் கொடுமைகளை அனுபவித்து வந்துள்ளனர்.

இவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை கனடாவில் உள்ள தமிழர்கள், அரசுடன் பேசிசெய்து வருகிறார்கள். இதற்கான விசாரணைகள் முடிய இன்னும் ஒருவாரம் ஆகும் என்று கூறப்படுகிறது.

அதுவரைக்கும் அனைவரும் தனி முகாமில் சிறைவைக்கப்பட்டிருப்பார்கள். அவர்களை யாரும் சந்திக்க முடியாது, அவர்களுடைய பெயர்களை வெளியிடவும் தடை செய்யப்பட்டுள்ளது. (6-2)

# கடுகதி ரயில் சேவை திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)


கொழும்பு கோட்டைக்கும் வவுனியாவுக்கும் இடையே சேவையில் ஈடுபட்டுள்ள யாழ்தேவி இன்ரர்சிற்றி புகையிரத சேவையை யாழ்தேவி கடுகதி புகையிரத சேவையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் இப்போது அறிவித்துள்ளது.

இம் மாதம் 15 ஆம் திகதி முதல் யாழ்தேவி இன்ரர் சிற்றி புகையிரத சேவை நேர மாற்றத்துடன் கடுகதி புகையிரத சேவையாக பிரயாணக் கட்டணங்களைக் குறைத்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும் தொழில்நுட்ப காரணங்களுக்காக இந்த நடவடிக்கை ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்தேவி இன்ரசிற்றி புகையிரத சேவை வழமைபோல கொழும்பு கோட்டையில் இருந்து வவுனியா–தாண்டிக்குளம் நோக்கி அதிகாலை 5.45 மணிக்குப் புறப்பட்டுச் சென்று மீண்டும் வவுனியாவிலிருந்து பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புகையிரத சேவைக்கான கட்டணங்களிலும் மாற்றமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 9ஆம் திருவிழா



படங்கள் –அரவிந்

## ஆண்டருள அகம் மலராயோ

மீண்டோம் போர்க் களத்தில் மாண்டவர் போக
மிச்சமென வந்தும் நாமிங்கு
கூண்டுப் பறவையென குறுகிக்
குன்றும் நிலையுற்றுத் தாழ்வுற்றோம்
வேண்டும் தீர்வென்று தீர்க்கமுறவே
மேன்மைமிக வாழுந் தமிழினமாக
ஆண்டருள அகமது மலராயோ
ஐயனே நல்லையூர் நாயகமே

அல்வாயூர் , சி.சிவநேசன்

## செப்பரிய செவ்வேளுன் திருவடி சரணம்

முப்பொழுது மடியவருன் முன்றலிற்
தொழு தெழுந்தால்
அப் பொழுதே மனமுவந்து
அருள் சுரக்கும் வேதியனே
சொற்பதங்கள் யானறியேனுன்
துணையினைப் பற்றிவிட
செப்பரிய செவ்வேளுன்
திருவடி சரணம்மயா
கற்பனைக்கு மெட்டாக் கலியுகனே நின்
வீதியுலாக் கண்டு களி கூர்ந்தேன் யான்
நற்றமிழால் திருப்புகழைப் பாடி நடமாட
நவின்றிடுவாய் முத்தமிழை நல்லையிலே

மஹா கணபதி, யாழ்ப்பாணம்

## சீர்மேவு பாலன் எங்கள் நல்லையிலே...

கந்தனுக்கு சொந்தயிடம் கைலாயம்
கான மயில் ஏறிவந்தான் கதிர்காமம்
அவுசுதனை அள்ளித்தர வல்லையிலே
ஆனந்தக் கோவில் கொண்டான் சன்னதியில்
கீரிமுகத்தழகன் கேணியிலே கிரமமாய்
நீராடவந்தான் மாவையிலே
தில்லைசிவன் புத்திரனாம் சின்னமகன்
சீர்மேவு பாலன் எங்கள் நல்லையிலே

தருமன் , நல்லூர்

## நல்லை முருகா வருக

நல்லை முருகனின் எல்லையில் கருணையில்
துன்பங்கள் சென்று மறைக
சொல் மொழிக் கெட்டாத தூயவன் திருவருள்
சொத்தாக வந்து நிறைக

முல்லை முறுவலால் எல்லையை ஆண்டிடும்
முருகா உன் கருணை பொழிக
இல்லை என்றென் றேங்கிடும் ஏழைகள் வாழ்விலே
எந்நாளும் கூட வருக

அன்பு வள்ளல்

வடிவேல் முருகா வல்வினைகள் தீர்க்க வா !

அன்னா தொழிலகம்



இணுவில்
T.P-021 222 3565

# கடந்த மாதம் மட்டும் 23 ஆயிரத்து 306 போதைப்பொருள் வழக்குகள் தாக்கல்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருட யூலை மாதம் போதைப் பொருள் சார்ந்த 23ஆயிரத்து 306 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாகவே இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இவ்வழக்குகள் மூலம் 850 இலட்சம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் இருந்து போதைப் பொருட்கள் நாட்டுக்குள் கடத்தி வரப்படுவதற்கு இங்குள்ளவர்களின் உதவி ஒத்துழைப்பும் உள்ளன.

இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு அதிக பட்ச தண்டனை வழங்கப்படவேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளிலும் சீனாவிலும் இக் குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

போதையூட்டும் ஒளடதங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் அவற்றின் பாவனையில் தங்கியுள்ளவர்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு அளிப்பது தொடர்பான கட்டளையின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (6-2)

### அன்னதானப் பணிக்கு உதவுவோர் தொடர்பு கொள்ளவும்

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இம் மஹோற்சவ காலங்களில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் அன்னதான பணிகள் மேற்கொள்ள இருப்பதால், இதற்கு உதவி செய்ய விரும்பும் அடியார்கள் மடாதிபதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். (6-2-35)

# வடக்கில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடரும்

## இந்தியா அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தொடர்ச்சியாக நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் தொடரும் என இந்தியா அறிவித்துள்ளதுடன் இவற்றை அகற்றும் பணிகளில் இலங்கைக்கு தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் உறுதியளித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தாவினால் நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவிற்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போது கடமையாற்றி வரும் இந்திய நிலக்கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களின் சேவைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏழு இந்திய நிறுவனங்கள் இலங்கையில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

# சுகாதாரமானதும் சுபீட்சமானதுமான நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு 66 ஆவது இடம்

(கொழும்பு)

சுகாதாரமானதும் சுபீட்சமானதுமான நாடுகளின் வரிசையில் இலங்கை 66 ஆம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நியூஸ்வீக் என்ற உலகப் புகழ் பெற்ற சஞ்சிகையினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதாரமானதும் சுபீட்சமானதுமான நாடுகளின் வரிசையில் பின்லாந்து முதலாம் இடத்தையும் சுவிற்ஸர்லாந்து இரண்டாம் இடத்தையும் சுவீடன் மூன்றாம் இடத்தையும் வகிக்கின்றன.

இந்த வரிசையில் அமெரிக்கா 11 ஆம் இடத்தையும், ஜேர்மன் 12 ஆம் இடத்தையும் இந்தியா 78 ஆம் இடத்தையும் வகிக்கின்றன. (6-2)

# இந்திய அரசாங்கத்தினால் கூரைத்தகடுகள் கையளிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக இந்தியாவினால் கல்வனைஸ் கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதல் கட்டமாக 365 மில்லியன் ரூபா பெறுமதியான கூரைத்தகடுகள் கடந்த 17ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் வைத்து இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2ஆயிரத்து 600 மெற்றிக்தொன் கல்வனைஸ் தகடுகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தாவினால் கூரைத் தகடுகள் அடங்கிய 19 கொள்கலன்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில், இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இந்திய அரசாங்கம் கடந்த 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலும் இந்த வருடத்தின் கடந்த பெப்ரவரி மாதத்திலும் கல்வனைஸ் கூரைத்தகடுகள் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

இலங்கைப் பெறுமதியில் 893 மில்லியன் ரூபா பெறுமதியுடைய இந்த கூரைத் தகடுகள் யாழ்ப்பாணம்,வவுனியா ,முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட 37ஆயிரத்து 645 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதென இந்திய உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது. (6-2)

# என்சிலூடஸ் துணைக்கோளில் பனிப்பாறைகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சூரிய குடும்பத்தில் உள்ள என்சிலூடஸ் துணைக் கோளில் தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விண்வெளி ஆராய்ச்சிக்காக செலுத்தப்பட்ட காசினி விண்கலம் நூற்றுக்கணக்கான படங்களை பூமிக்கு அனுப்பியுள்ளது.

சூரிய குடும்பத்தில் உள்ள என்சிலூடஸ் துணைக் கோளை காசினி விண்கலம் சுமார் 6இலட்சத்து 17 ஆயிரம் மைல் தூரத்தில் பயணித்த போதுபடம் எடுத்துள்ளது.இதனை விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

இதன் போது என்சிலூடஸில் உப்பு நீர் பனிப்பாறைகள் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் அங்கு ஏரிகள், நீர்தேக்கங்கள் மற்றும் கடல்கள் இருந்திருக்க கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மீன் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகளும் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஆராய்ச்சி மேலும் தொடர்ந்து நடைபெறுகிறது. சூரிய மண்டலத்தில் உள்ள 3 துணை கோள்களில் என்சிலூடஸும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)


7 ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வி மங்கையர்க்கரசி
பொன்னம்பலம் (மங்கை)

மலர்வு: குப்பிளானில்
23.08.1978

உதிர்வு: லண்டனில்
20.08.2003



அன்பின் திருவுருவாய்
பாசத்தைப் பொழிந்த
இனிய இளைய அழகு மகளே!

மங்கையே!

ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறுமோ எம் துயர்தான்
உன் அகண்ட நினைவுகளை
மனதில் சுமந்தபடி ....

உன் நினைவில் வாழும்....
அப்பா , அம்மா ,அண்ணன்மார்,
அக்காமார்.

பொன்-மணிவாசா
குப்பிளான் தெற்கு

தொ.பே.0778526152 (2182)

# ஈழத்தவர் வரலாறு (10)

## 2.வரலாற்றுதய காலத் தமிழ் மன்னர்கள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

உண்மையில் இந்தக் குடியேற்றங்கள் நிறுவப்பட்ட பகுதிகள், முன்னரேயே சிறந்த குடியிருப்புகளாக விளங்கியுள்ளன என்பதும், ஈழத்தின் நாகரிகத்திற்கு வித்திட்ட




திராவிட மக்களது சிறப்புமிக்க வதிவிடங்கள் அவை என்பதும் தொல்லியலாய்வுகள் மூலம் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

எனவே, சிங்ஹல விஜயனே இலங்கையின் அடையாளங் காணப்படும் முதலாவது மன்னனாக முடிபுனைந்து கொண்டான். முடிசூடிக்கொள்ளுமுன் தென்னிந்தியாவின் பாண்டி நாட்டிலிருந்து தனது அரசியாகப் பாண்டி இளவரசி ஒருத்தியையும், தனது எழுநூறு தோழர்களுக்கும் எழுநூறு பாண்டிய இராச்சியப் பெண்களையும் வரவழைத்துக் கொண்டதாக மகாவம்சம் கூறுகிறது.

சிங்கள நவீன வரலாற்றாசிரியர்கள் விரும்புமாப் போல விஜயனும் அவனது தோழர்களும் இந்தியாவின் வடபுலங்களிலிருந்து இலங்கையில் குடியேறினர் எனக் கொண்டாலும், அவர்கள் வரும்போது இத்தீவில் இருந்தவர்களும், அவர்கள் வந்த பின்னர் வருவிக்கப்பட்டவர்களும் திராவிடர் என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. பாண்டிநாட்டு இளவரசியுடன் வந்த 700 தோழியரும் விஜயனின் 700 நண்பர்களை மணந்ததாக மகாவம்சம் கூறும் செய்தியை நோக்கும்போதும் இவர்களே இந் நாட்டின் நாகரிக கர்த்தாக்கள் எனப் பாளி நூல்கள் கூறுவதை அவதானிக்கும்போதும், ஆதி ஈழத்து நாகரிக வரலாற்றில் தமிழ் மக்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் புலனாகின்றது.

#### 2.2 நாக சிற்றரசுகள்


இயக்க குழுக்கள் தமக்குள் பகைத்துக் கொண்டு பிரிவுற்று நின்றதால், தென்னிலங்கை சிங்ஹல விஜயனிடம் பறிபோனது. ஆனால் அவர்கள் வடக்கே நாகதீபத்தைக் கைப்பற்றவோ அங்கு தமது குடியேற்றங்களை நிறுவவோ இயலாது போய்விட்டது. விஜயன் கி.மு.483 இலிருந்து கி.மு.445 வரை இலங்கையின் மன்னனாக விளங்கினான் என மகாவம்சம் கூறுகின்றது. விஜயனின் வருகைக்கு முன்னரும், விஜயனின் காலத்திலும் ஆதிகால இலங்கையில் பல சிற்றரசுகள் இருந்துள்ளன என்று துணியலாம்.

ஏற்கனவே, முதலத்தியாயத்தில் விபரித்ததுபோல, தென்னிந்தியாவில் கி.மு.1000 ஆண்டளவில் தோற்றம் பெற்ற திராவிட மக்களது பெருங்கற்காலப் பண்பாட்டின் தொல்லியற் சின்னங்களான ஈமத்தாழிகள், பிராமியக் கல்வெட்டுக்கள் இதனை நிரூபிக்கின்றன. இதுவரை கண்டறியப்பட்ட பிராமியக் கல்வெட்டுக்களில் வரும் பருமக (பருமகன்), கமனி, அய (ஆய்), வேள (வேள்) என்பன குறுநிலத் தலைவர்களையே குறிக்கின்றனவாம்.

இலங்கையின் ஆட்சி மையமாக அனுராதபுரத்தையே மகாவம்சம் முதலான பாளி நூல்கள் குறிக்கின்றன. அதே நூல்கள் அனுராதபுரத்திற்கு வடக்கேயும் தெற்கேயும் இருந்த சிறு இராச்சியங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளன.

உதாரணமாக இலங்கைத்தீவின் வடபாகத்தில் கி.மு.6ஆம் நூற்றாண்டில் நாகதீவு (நாகதீபம்) எனும் ஓர் அரசு விளங்கியது. நாகதீவின் மன்னர்களாக மகோதரன், குலோதரன் என்போர் விளங்கியுள்ளனர். நாகதீபத்தில் சிறப்பான சிற்றரசுகளாக கோகர்ணம் (திருகோணமலை), மகாதித்த (மாந்தை), மணிபல்லவம் (நயினாதீவு), நாவலந்தீவு (வலிகாமம்), கரியாலை, நாகபடுவான் முதலியன விளங்கியுள்ளன. திரிகூடம், இலங்காபுரி, கோகர்ணம் எனப் பலபெயர்களால் திருகோணமலை அழைக்கப்பட்டு வந்துள்ளது. மாந்தை என்று புகழ்பெற்ற மாதோட்டம் மன்னாரிலுள்ளது. விஜயனின் அரசியும் 700 தோழிகளும் வந்திறங்கிய துறைமுகமாக மாந்தை குறிப்பிடப்படுகின்றது. பாளி நூல்கள் இதனை மாதித்த (மகாதீர்த்தம்) என அழைக்கின்றன.மகாதித்த என்றால் பெருந்துறை எனப் பொருள்படும் எனச் சிற்றம்பலம் கருதுவார். மணிபல்லவம் பற்றிய சிறப்புக்கள் தமிழிலக்கிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வளைவணன் என்ற நாக மன்னன் ஆண்டநாடு இதுவென அறியப்படுகின்றது.




யாழ்ப்பாணக் குடாநாட்டின் இன்றைய வலிகாமம் பகுதி முன்னர் ஐம்புத்தீவு என அழைக்கப்பட்டது.

ஐம்புத்தீவு என்றால் தமிழில் அதனை நாவலந்தீவு எனலாம். தீவு என்ற பெயருக்கேற்ப வலிகாமம் முன்பு நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. கிழக்கே உப்பாற்றையும் தொண்டைமானாற்றையும் பிரித்து காலகதியில் நிலமேடு ஒன்று தோன்றியது என்பதைப் புவிச்சரிதவியல் அடிப்படையில் நிறுவமுடியும்.

இந்த நாவலத் தீவிலேயே மகாவம்சம் குறிப்பிடுகின்ற ஜம்புகோளப் பட்டினம் என்ற துறை உள்ளது. இதனூடாகவே சங்கமித்தை வெள்ளரசுக் கிளையுடன் ஈழம் புகுந்தாள்.

இன்றைய வன்னிநிலப் பரப்பில் அமைந்துள்ள பூநகரிப்ப பிரதேச கரியாலை நாகபடுவான். நாகபடுவான் வில்லு, குருந்தன் குளம் முதலான பகுதிகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் புகழ்பெற்ற குடியேற்றங்களாக விளங்கியுள்ளன. (தொடரும்)


---

# சைவசித்தாந்த முத்தியும் சங்கர வேதாந்த முத்தியும்

## ஓர் ஒப்பீட்டாய்வு (4)

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராசிரியர் நா.ஞானகுமாரன்
பீடாதிபதி ,கலைப்பீடம் ,
யாழ்.பல்கலைக்கழகம்



ஞானமார்க்கத்தினை முத்திக்குரிய முதன்மை மார்க்கமாக வேதாந்தம் வலியுறுத்தி நிற்கின்ற வகையில் இந்திய தரிசனங்கள் அனைத்திலிருந்து இது வேறுபட்டுத் தனித்து வமான தரிசனமொன்றாக அமைகின்றது. பிரம்மம் முழுமையான உண்மைப் பொருளாகவும் ஞானசொரூபமானதாகவும் விளங்குவதாகச் சங்கர வேதாந்தம் எடுத்தாளும். ஞானமே வடிவான பிரம்மமானது அஞ்ஞானத்தின் இணைவினால் ஞானமான உண்மைத் தன்மையை உணராது துன்பத்திற்குரியதாக அல்லலுறுகின்றது. அஞ்ஞானம் மாயையெனப்படுகின்றது. இம் மாயையின் தாக்கத்தினால் உண்மையான பிரம்மத்தின் ஞானத் தன்மை தெரியவொட்டாது போகின்றது. எப்போது பிரம்மத்தின் உண்மையான நிலை உணரப்படுகின்றதோ அப்போதே முத்தியானது கைவரப் பெறுமென்பது சங்கர வேதாந்திகளது விளக்கமாகின்றது.

எனவே ஞானமே முத்தியினை அடைவதற்குரிய ஒரேயொரு வழியாக எடுத்தாளப்படுவது இங்கு சிந்தனைக்குரியதாகின்றது.

அதேவேளை சைவ சித்தாந்தமானது சரியை, கிரியை,யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களை ஏற்பதுடன் பக்தி மார்க்கம், கர்ம மார்க்கம், யோக மார்க்கம், ஞான மார்க்கம் ஆகிய மார்க்கங்களின் வழி களில் முத்தியடைதல் சாத்தியம் என விளக்கி நிற்கின்றது. முத்தியடைதலுக்குரிய இம் மார்க்கங்கள் பலவெனினும் இம் மார்க்கங்களினை நுணுகி ஆராயுமிடத்து சங்கர வேதாந்தத்திற்கு அயலாக சித்தாந்த விளக்கங்களும் பெரிதும் ஞானத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்திருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

'முந்திய ஒருமையாலே மொழிந்தவை
கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல்
அது தானாக
வந்தவா றெய்தல் நிட்டை மருவுதல்
என்று நான்காம்
இந்த வாறடைந்தோர் முத்தி யெய்திய
வியல்பினோரே'

எனும் பாடலும் ஞான நிலையடைந்தோர் முத்தி நிலைக்குரியோர் ஏன்பதைத் தெளிவுறுத்துகின்றது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களைக் கடைப்பிடிக்கின்ற வகையில்,

''முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்' எனச் சித்தியார் எடுத்துரைக்கின்றது.

இந் நான்கு முத்திகளுள் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று திறத்தால் அடையப் பெறும் சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய முத்திகள் பதமுத்தி என்றும் ஞானமார்க்கத்தால் எய்தப் பெறும் சாயுச்சிய முத்தியானது பரமுத்தி என்றும் எடுத்தாளப்படுகின்றது.

சாலோகம், சாமீபம்,சாரூபம் என்பன முறையே சிவ உலகத்தையடைதல், சிவனை அண்மித்தல் , சிவ உருவத்தைப் பெறல் என்னும் பொருளைச் சுட்டுவதாகும். சாயுச்சியமென்பது சிவனுடன் இரண்டறக் கலத்தலைச் சுட்டி நிற்கின்றது.

இதனையே அருணந்தி சிவாச்சாரியார்.

'' ஒன்றாகாமல் இரண்டாகாமல்
ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்'' எனவும்

(தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் வரை

**மனதில் பட்டதை மறைக்காமல் பேசும் தனுசு இராசி நேயர்களே!**

உதவும் மனப்பான்மை கொண்டவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள் தான். தயவு, தாட்சண்யம் பார்ப் பதன் மூலம் தயங்காமல் பலரின் எதிர்ப் புகளுக்கும் ஆளாவீர்கள். உறவை வளர்த் துக் கொள்ள பாடுபடுபவர்களும் நீங்கள் தான். உங்கள் செயலை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டாலும், நன்றி காட்டமாட்டார்கள். அதற்காக கவலைப்படாமல் மீண்டும், மீண் டும் உதவுபவர்களும் நீங்கள் தான்.

இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால், வளர்ச்சிப் பாதையில் சில இடையூறுகள் ஏற்படலாம். இருந்தாலும், தளர்ச்சி ஏற்படாது. காரணம், 9, 10க்கு அதிபதியான சூரியனும், புதனும் ஒன்று கூடி மாதம் ஆரம்பமாகிறது. இந்த "தர்ம கர்மாதிபதி" யோகம் உங்களுக்கு தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வைக்கும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும் என்றாலும், விரயங்கள் அதிகரிக்கும். கோதண்டராகு கொடுக்கும் என்றாலும், விரயாதிபதி செவ்வாய், தனாதிபதி சனியுடன் கூடி சஞ்சரிப்பது விரயங்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இருமடங்காகும்.

உங்கள் இராசிக்கு 7, 10க்கு அதிபதியான புதன் வக்ர இயக்கத்தோடு இருந்தாலும், 9க்கு அதிபதியுடன் கூடி இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். வேலை வாய்ப்பு களத்திரத்திற்கு கிடைத்தால் வருமானம் இருவருக்கும் வருமே என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது நல்ல நேரம். எதிர்பார்த்த எதிர்பார்ப்புகள் நிறைவேறும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். இம் மாதம் 22ஆம் திகதி கடகம் புதனைக் காட்டிலும், எதிர்வரும் செப்டம்பர்மாதம் 1ஆம் திகதி சிம்ம புதனே நற்பலன் தரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் மாறலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட பகை மாறும்.

உங்கள் இராசிநாதனுக்கு பகைவனாக சுக்ரன் இம்மாதம் 31ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. பெண்வழி பிரச்சினைகள் உருவாகலாம். இளைய சகோதரத்தின் உறவில் விரிசல் ஏற்படலாம். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்க, விற்க உகந்த நேரமிது. உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். தெசா புத்தி வலுப் பெற்றவர்கள் அதை ஏற்றுக் கொள்வது நல்லது. வங்கிகளில் அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள்.

எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை செவ்வாயின் சொந்த வீட்டில் பதிவதால், சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். தொல்லைதந்த சகோதரர்கள் இனி தோள் கொடுத்து உதவுவர். வாங்கிய இடம் விற்கவில்லையே என்ற கவலை தீரும். தேங்கிக் கிடந்த காரியங்கள் சுறுசுறுப்பாக நடை பெறும். நீண்டதூரப் பயணங்களை ஒருசிலர் மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

காரியங்களில் வெற்றி காணவும், கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட கவலைகள் அகலவும் குரு தட்சிணாமூர்த்தியை வியாழன் தோறும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். உடன்பிறப்புகள் வழியில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ள மாற்று மருத்துவத்தை அணுகுவீர்கள். கணவன் - மனைவி உறவு திருப்திகரமாக இருந்தாலும், மூன்றாம் நபரால் அடிக்கடி சர்ச்சைகள் உருவாகலாம். பிள்ளைகளால் அதிக பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். உங்கள் கவனம் முழுவதும் பிள்ளைகள் மேல் இருப்பது நல்லது. வழிபாடு வளர்ச்சியைத் தரும்.



## மகரம்

உத்தராடம் 2,3, 4ஆம் பாதங்கள், திருவோணம் அவிட்டம்,1,2, பாதங்கள்

***கலகலப்பாகப் பேசி காரியங்களைச் சாதிக்கும் மகர இராசி நேயர்களே!***

வாழ்வில் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களை தோள் கொடுத்து தூக்கி விடுபவர்கள் நீங்கள். முத்தான உங்கள் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டைகள் ஏராளம் இளம் வயதில் வந்து சேரலாம். புத்தாண்டு பிறந்தால் நன்றாக இருக்கும்! புது வருடத்தில் கிரகங்கள் மாறினால் நன்றாக இருக்கும்! குருப்பெயர்ச்சிக்கு பின் குதூகலம் வந்து சேரும்! என்று சொல்லிக் கொண்டே பொறுமையை கையாண்டு செயல்படுபவர்கள் நீங்கள். நிதானம் தான் உங்கள் வெற்றியின் இரகசியம் என்பதை அனுபவத்தில் புரிந்து கொள்வீர்கள்.

இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி பகை கிரகத்தின் பிடியில் சிக்கியிருக்கிறார். எனவே, தேவையில்லாத வீண் குழப்பங்களும், தெய்வீக காரியங்களில் நாட்டக் குறைவும் ஏற்படும். தெய்வீக காரியங்களில் முழுமையாக நீங்கள் ஈடுபாடு செலுத்தினால் வையகம் போற்றும் வாழ்க்கை உங்களுக்கு வருங்காலத்தில் அமையும்.

மாத தொடக்கத்தில் 5, 10க்கு அதிபதியான சுக்ரன் நீச்சம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. குருவும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே, சகோதர வழியிலும், குழந்தைகள் வழியிலும் சச்சரவுகள் ஏற்பட்டு அதை சமாளிப்பீர்கள். முறையாக நவகிரக் வழிபாட்டை மேற்கொண்டால், முன்னேற்றங்கள் வந்துசேரும்.

கடக புதனின் பெயர்ச்சி உங்கள் கவலைகளில் ஒரு பகுதியை தீர்க்கப்போகிறது. இம் மாதம் 22ஆம் திகதி புதன் கடகத்தில் சஞ்சரிக்கும் பொழுது, புதிய ஒப்பந்தங்கள் இல்லம் தேடி வரும். பொருளாதார நிலை உயர்வதற்கு சில அறிகுறிகள் தோன்றும். தந்தை வழி உறவில் திடீர் பகை ஏற்பட்டு அகலும். முன்னோர் சொத்துக்களில் வழக்குகள் ஏற்படாமல் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. பஞ்சாயத்துக்கள் மூலம் நீங்கள் பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். மாமன் வழி ஆதரவு ஓரளவு கிடைக்கும். தொழில் ரீதியாக வரும் பயணங்களைத் தள்ளி வைப்பீர்கள்.

இக்காலம் ஒரு பொற்காலமாகும். 5, 10க்கு அதிபதி சுக்ரன் இம்மாதம் 31ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். 10க்கு அதிபதி 10இல் சஞ்சரிப்பது யோகம் தான். தொழில் வளம் சிறப்பாகயிருக்கும். தொகை வந்து கொண்டேயிருக்கும். எழிலான வீடு கட்டி குடியேற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். அழியாத புகழுக்கும் அத்திவாரம் அமைக்கும் வாய்ப்பு கிட்டும்.

சிம்ம புதனின் சஞ்சாரம் எதிர்வரும் செப்டம்பர் முதல் திகதியில் நிகழ இருக்கிறது. அஷ்டமாதிபதி சூரியன் வலுப்பெறும் இந்த நேரத்தில் ஆரோக்கியத்திற்காகவும், அடுத்தவர் நலன் கருதியும் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சியாக இருப்பது நல்லது. ஒருசிலருக்கு அரசு வழித்தொல்லைகள் ஏற்படலாம்.


எதிர்வரும் செப்டம்பர் 6 ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் சஞ்சரிப்பது நன்மை தான். இடம், பூமியால் இலாபம் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அலைச்சலால் ஆதாயம் கிடைக்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சூரியனாலும், மாதத் தொடக்கத்தில் கூடிய செவ்வாய், சனியின் ஆதிக்கத்தாலும் ஏற்படும் தடைகள் அகல சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

அஷ்டமாதிபதி சூரியன் அஷ்டமத்தில் இருப்பதால், வேலைப்பளு கூடும். மன அமைதி குறையும். பெற்றோரும், மற்றோரும் உங்களிடம் வைத்திருக்கும் பிரியம் குறையாமல் இருக்க நீங்கள் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் சொல்லுக்கு கட்டுப்பட்டும், வீட்டில் உள்ள பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டும் நடந்தால் மனக்கசப்பு மாறி மகிழ்ச்சி உருவாகும். புதிய மனிதர்களிடம் பழகும்பொழுது விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும் என்றாலும், வரவு திருப்தி தரும். (தொடரும்)


வதிரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொல்பொருள் கைத்தொழில் நிலைய திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டிப்பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மங்கல விளக்கேற்று வதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச் சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா கைத்தொழில் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ரணதுங்கா கைதுசெய்யப்படாதது ஏன்? அரசியல் பிரமுகர்களிடையே சந்தேகம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக அண்மையில், காலியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது முன்னாள் கிரிக்கெட் அணி தலைவரும், சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க, கைது செய்யப்படாமை குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மற்றும் அஜித் குமார ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

எனினும் அர்ஜுன ரணதுங்க தம்மை கைதுசெய்யுமாறு பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டபோதும் அவர். கைதுசெய்யப்படவில்லை.

அரசாங்கத்தின் உத்தரவுக்கு அமையவே அர்ஜுன ரணதுங்க கைதுசெய்யப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

அர்ஜுன ரணதுங்க அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்தவர் என்பதால் அவரைக் கைதுசெய்தால், மக்கள் மத்தியில் அதிருப்தியை தேடிக்கொள்ள நேரிடும். அத்துடன் அவரைக் கைதுசெய்தால் அவரின் புகழை உயர்த்துவதாக அது அமைந்து விடும் என்ற காரணங்களாலேயே அவரை பொலிஸார் கைதுசெய்யவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# குன்றும் குழியுமாக காணப்படும் வீதியால் பயணிப்பதில் சிரமம் மக்கள் விசனம்

(மாதகல்)

மாதகல் பிரதான வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் இவ்வீதியால் போக்குவரத்து செய்யும் மக்கள் பலவித சிரமங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, மாதகலையும் பண்டத்தரிப்பையும் இணைக்கும் பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமையாலும் அதிக வாகனப் போக்குவரத்து காரணமாக இவ் வீதியில் குழிகள், பெரிய பள்ளங்கள் தோன்றி கற்கள் கிளம்பியும் காணப்படுகிறது.

குறிப்பாக அந்தோனியார் கோவிலடி பிரதான வீதியே இந்நிலைக்குள்ளாகியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


மாதகல் பிரதான வீதி தார்க்கலவை கொண்டு செப்பனிடப்பட்ட போதும் மாதகல் உட்பகுதி பிரதான வீதியானது சீர் செய்யப் படவில்லை.

மேற் குறித்த வீதியால் விவசாயிகள், வியாபாரிகள், தென்பகுதி உல்லாசப் பயணிகள், பொதுமக்கள் என பலர் அன்றாடம் சென்று வருகின்றனர். எனவே ,இவ்வீதியை மக்கள் தேவைக்காக பயன்படுத்த செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (6-2)

# ஜனாதிபதி மஹிந்தவின் தூண்டிலில் சிக்கித் துடிக்கும் ஐ.தே. கட்சி



இரவில் ஒருவர் விழுந்த குழியில் பகலில் விழமாட்டார் என்று பழமொழி இருக்கிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ இரவில் விழுந்த குழியை பகலிலும் தேடிச் சென்று குதிப்பது ஆச்சரியமான அவாவாகும். மகிந்த தியவன்னா ஆற்றில் தூண்டிலைப் போட்டு ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களைச் சிக்க வைக்கும்



பொறுப்பு பசிலிடமும், நாம லிடமும் வழங்கிவிட்டு ரணிலை வரவழைத்து பேச்சு நடத்தும் போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைத்துக் கொள்வார் என்பதை சிறுபிள்ளை கூட அறியும்.

2006 ஆம் ஆண்டு ரணிலைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்த மகிந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்களை தன்வசம் இழுத்துக் கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சி நடு இரவில் சென்று விழுந்த படுபாதாளம் என இதனைக் கூறலாம்.

அன்று நடு இரவில் சென்று குழியில் விழுந்து விடுவோம் என அறியாமல் பேச்சுக்களில் ஈடுபட்டாலும் இம்முறை தெரிந்துகொண்டே அந்தப் பேச்சுவார்த்தையில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. குழியொன்று



இருப்பதைத் தெரிந்து கொண்டு குதிக்க ஆசைப்பட்டால் குதியுங்கள் எனக் கூறி மஹிந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு குழியைக் காட்டும் போது தியவன்னா ஆற்றில் போட்ட தூண்டிலில் சிக்கிய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை பசிலும் நாமலும் அலரி மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

இதனைத் தெரிந்து கொண்டே ரணில் மீண்டும் மஹிந்தவைச் சந்திக்கச் சென்று மஹிந்தவின் குழியில் குதித்தார். அவர் மாத்திரமல்ல அவருடன் இருக்கும் மிகப் பெரிய கட்சியுடன் அவர் அந்தக் குழியில் குதித்துள்ளார்.

இந்த மிகப் பெரிய கட்சி, குழியில் விழுந்தது முதலாவது முறையோ அல்லது இரண்டாவது முறையோ அல்ல. சந்திரிக்கா காலத்திலிருந்து இந்தக் கட்சி குழியில் விழுந்து வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி என்பது இவ்வாறு குழியில் விழ வேண்டிய கட்சியா?

மஹிந்தவின் கால்களில் இப்படி ஐக்கிய தேசியக் கட்சி விழுவதற்கு என்ன பாவம் செய்திருக்கிறது.1977ஆம் ஆண்டு படுதோல்வியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாமல் போனது. அப்போது அந்தக் கட்சிக்கு விரல்விட்டு எண்ணக் கூடிய உறுப்பினர்களே நாடாளுமன்றத்தில் இருந்தனர்.

ஆண் ஒருவரைப் பெண் ஒருவராகவும்,பெண் ஒருவரை ஆண் ஒருவராகவும் மாற்றுவதற்கு மாத்திரமே முடியாத சகல அதிகாரங்களையும் ஜே.ஆர். அப்போது தன் வசம் கொண்டிருந்தார். தனக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி

## ரணில் தலை வைக்க வேண்டிய தண்டவாளத்தில் தலைவைத்த சரத்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டார நாயக்கவின் குடியுரிமையை இரத்துச் செய்து அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இல்லாமல் செய்தார்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்று 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று பல வருடங்களுக்கு ஜனாதிபதிப் பதவியை தன் வசம் வைத்துக் கொண்ட ஜே.ஆர். ஜயவர்த்தன சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்ற பலமான ஆறில் ஐந்து என்ற பெரும்பான்மை பலத்தையும் தக்க வைத்துக் கொண்டார்.

இதன் பின்னர் 83ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தை அடுத்து ஜே.ஆர். ஜயவர்த்தன பாதிப்புக்களைச் சந்தித்தார். கலவரத்தினால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தை

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

நிறுத்துவதற்காக சர்வக்கட்சிக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு இந்தியா ஜே.ஆர்.க்கு அழுத்தங்களைக் கொடுத்தது. இந்த மாநாட்டிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் அழைக்குமாறு இந்தியா' அழுத்தங்களைக் கொடுத்தது. இதனையடுத்து ஜே.ஆர். சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சுதந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுத்தார். அழைப்பு விடுத்ததை அடுத்து கட்சியின் தலைவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தன் கட்சியின் அரசியல் சபையைக் கூட்டினார். ஜே. ஆர். தனக்கும், தனது கட்சியினருக்கும் நாட்டிற்கும் செய்துள்ள அநீதிகள் காரணமாக தான் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென தெரிவித்தார்.

நீங்கள் எப்படி பேச்சுவார்த்தைக்குப் போவீர்கள். உங்களது குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா பேச்சுவார்த்தைக்கு வர வேண்டுமானால் உடனடியாக அவரது குடியுரிமையை வழங்க வேண்டும் என ஜே.ஆரிடம் கோரிக்கை விடுப்போம் என அரசியல் சபையில் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தீர்மானத்திற்கு வந்தனர்.

இதனடிப்படையில், கே.பீ.ரத்னாயக்க தலைமையில் அநுர, கட்சியின் செயலாளர் ரத்னசிறி விக்ரமநாயக்க ஜே. ஆர்.ஐச். சந்தித்தனர். ஜே.ஆர்.ஐச் சந்தித்த இவர்கள் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவிற்கு குடியுரிமை வழங்கப்படுமானால் மாத்திரமே மாநாட்டில் கலந்து கொள்ள முடியுமெனக் கூறினார். இதன் காரணமாக ஜே.ஆர். கடும் அசௌகரியத்தை எதிர்நோக்கியது மாத்திரமல்லாமல் ஆத்திரமடைந்தார்.

இதன்பின்னர் பகிரங்கக் கூட்டமொன்றில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவையும், சுதந்திரக் கட்சியையும் கடுமையாக விமர்சித்தார். ஜே.ஆர்.இன் விமர்சனங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட தினத்தில் சுதந்திரக் கட்சியும் அறிக்கையொன்றை வெளியிட்டது.

சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் ஜே.ஆர்.ஐச்.சந்தித்தபோது, ஜே. ஆர்.கூறிய விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை மகிழ்விப்பதற்காக அன்றி தீர்வை வழங்குவதற்காக சர்வகட்சி மாநாட்டை நடத்தவில்லையென ஜே.ஆர். தெரிவித்திருந்ததாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. சுதந்திரக் கட்சியின் இந்த அறிக்கையை அடுத்து ஜே.ஆர்.பெரும் குழப்பத்திற்குள்ளானார். ஜே.ஆர். பாரிய சிக்கலில் மாட்டிக்கொண்டார். ஜே.ஆர்.மேற்கொள்வது பொய்யான நடவடிக்கையெனக் கூறி இந்திய அரசாங்கம் தமிழ் போராளிகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தது. இந்தச் சம்பவத்தினால் சுதந்திரக் கட்சி வீழ்ச்சியடையவில்லை. ஜே.ஆர். அரசாங்கத்தினால் பெரும் அடக்கு முறைகளைச் சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.ஆருக்கு பாடமொன்றைக் கற்பிப்பதற்காக இலங்கையின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியை அழித்து விட்டு ஜே.ஆர். இன் அரசாங்கம் நிலைத்திருக்க முடியாது என்பதை ஒப்பு வித்தது.

பெண் ஒருவரை ஆண் ஒருவராகவும் ஆண் ஒருவரை பெண் ஒருவராகவும் மாத்திரமே மாற்ற முடியாது, ஏனைய தேவையான அனைத்தையும் செய்யலாம என நினைத்த ஜே.ஆர்.இன் அரசாங்கத்தினால் வலுகுன்ற செய்யப்பட்ட சுதந்திரக் கட்சி, முதுகெலும்புடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர் கொண்டது. அப்போது, சுதந்திரக்கட்சியைவிட பலமான இடத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த முதுகெலும்பு எங்கே? உண்மையில் ரணில் விக்ரமசிங்க, மஹிந்தவைச் சந்



திக்கும் போதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியின் முதுகெலும்பே உடைந்தது. 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஜெனரல் சரத்பொன்சேகா சிறை வைக்கப்பட்ட பின்னர் மஹிந்த ரணிலைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது ரணில் அலரிமாளி கைக்கு ஓடோடிச் சென்றதைப் பார்த்த ஐக்கிய தேசியக் கட்சியி னர் மாத்திரமல்ல சகல் எதிர்க்கட்சி கள் மற்றும் அரசாங்கத்திற்கு எதி ரான மக்களின் முதுகெலும்பும் உடைந்துபோனது.

(13ஆம் பக்கம் பார்க்க....)

### உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில்

# பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகள் சாட்சியமளிக்க உள்ளனர்

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது உயர் பதவிகளை வகித்த பாதுகாப்பு அதிகாரிகள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விடம் சாட்சியமளிக்கவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கடற்படை, வான்படை மற்றும் இராணு வத் தளபதிகள் சாட்சியமளிப்பார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

விமானப்படைத் தளபதி ரொசான் குண திலக்க, கடற்படைத் தளபதி திசர சமரசிங்க, இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய, மேஜர் ஜெனரல் கமல் கருணாரட்ன மற்றும் மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா ஆகியோர் சாட்சியமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பான தக வல்களை படையதிகாரிகள் வழங்குவார்கள் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் அறிவித் துள்ளார்.

கள நிலைமைகள் குறித்த விளக்கங் களை அளிக்கக் கூடிய ஆற்றல் அவர்களிடம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினர் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படக் கூடாது என்பதில் மிகவும் நிதானமாக செயற்பட்டதாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உதாரணமாக புலனாய்வுத் தகவல்க ளின் அடிப்படையில் மிகத் துல்லியமாக சு.ப.தமிழ்ச்செல்வன் மீது தாக்குதல் நடத் தப்பட்டதாகவும் இந்தத் தாக்குதலின் போது பொது மக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (6-2)

# புத்தரின் உருவம் பொறித்த சாவிக்கொத்து விற்றோருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை

புத்தரின் உருவம் பொறித்த சாவிக் கொத் துக்களை விற்றதன் மூலம் புத்த மதத்தை அவமரியாதை செய்து விட்டதாக கூறி இரண்டு பேருக்கு நீதிபதி ஒருவர் சிறைத் தண்டனை விதித்துள்ளாா.

அபுபக்கர் கலாம் மற்றும் துவான் ராஜப் தீன் என்ற இந்த இருவரும் பொலிஸாரால் நகரத்தின் மையப்பகுதியான புறக்கோட்டை யில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை விசாரித்த கொழும்பு தலைமை நீதிபதி தண்டனைச் சட்டத்தின் ஒரு பிரிவின் அடிப்படையில் மதத்துக்கு புனிதமான பொருளை இவர்கள் அவமரியாதை செய்து விட்டார்கள் என்று கூறி ஓராண்டுக்கு சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

இந்த தண்டனை இரண்டு ஆண்டு காலத்திற்கு பின்னர் தான் அமுலுக்கு வரும் என்பதுடன் இவ்வாறான தீர்ப்புக்கள் இலங் கையில் அபூர்வமாகத்தான் வழங்கப்படுகி றது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக புத்த துறவிகளின் அதிகரித்து வரும் அரசியல் சக்தியை தொடர்ந்து புத்த மதம் தொடர்பான அனுஷ்டானங்களை கடைப்பிடிப்பதில் மிக வும் கெடுபிடி காணப்படுவதாக ஒரு சிலர் கூறுகின்றனர்.

இதேபோக்கு இலங்கையின் மூன்றாவது பெரிய மதமான இஸ்லாத்திலும் காணப்படு வதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

பல ஆண்டுகளாக இலங்கையில் உள் நாட்டு போர் இடம்பெற்ற போதிலும் நாட்டில் உள்ள நான்கு மதத்தினரும் ஒருவருக்கு ஒருவர் மரியாதை பாராட்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


# மக்கள் வங்கி

## அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.09.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ் ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | | |
| 3 | காங்கேசன்துறை - 031 | | |
| 4 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 5 | யாழ் பிரதான வீதி - 104 | | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | | |
| 7 | நெல்லிடி - 106 | | |
| 8 | அச்சுவேலி - 107 | | |
| 9 | சங்கானை - 108 | 10.10.2010 | மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 10 | சுன்னாகம் - 109 | | |
| 11 | சாவகச்சேரி - 110 | | |
| 12 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 13 | யாழ் பல்கலைக்கழகம் - 162 | | |
| 14 | சேவை நிலையம்,திருநெல்வேலி - 855 | | |
| 15 | யாழ் கன்னாதிட்டி - 284 | | |
| 16 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |
| 17 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத் தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/895)


# 20.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 636 - அரபுப் படைகள் பைசண்டைன் பேரரசிடம் இருந்து சிரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றைக் கைப்பற்றின.
- 1000 -ஹங்கேரி நாடு முதலாம் ஸ்டீபன் என்பவனால் உருவாக்கப் பட்டது.
- 1866 - அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அமெரிக்க உள்நாட் டுப் போர் முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்சை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றின.
- 1917 - இலங்கையில் ஒரு ரூபாய்த் தாள் வழங்கப்பட்டது.
- 1940 - மெக்சிக்கோவில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் ரஷ்யப் புரட்சியாளர் லியோன் ட்ரோட்ஸ்கி படுகாயமுற்று அடுத்த நாள் மரணமானார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ருமேனியா மீது சோவியத் ஒன்றியம் தாக்குதலை ஆரம்பித்தது.
- 1953 - ஐதரசன் குண்டைத் தாம் சோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 1960 - செனெகல் மாலிக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனி நாடாக அறிவித்தது.
- 1968 - பனிப்போர்: 200,000 வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்லாவாக்கியாவினுள் புகுந்தன.
- 1975 - நாசா,வைக்கிங் 1 விண்கலத்தை செவ்வாயை நோக்கி ஏவியது.
- 1977 - நாசா வொயேஜர் 2 விண்கலத்தை ஏவியது.
- 1988 - ஈரான்-ஈராக் போர்: 8 ஆண்டுகள் போரின் பின்னர் போர் நிறுத்தம் உடன்பாடாகியது.
- 1991 - எஸ்தோனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகி மீண்டும் தனி நாடாகியது.
- 1997 - அல்ஜீரியாவில் 60 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - அருட்தந்தை ஜிம் பிறவுண் மற்றும் அவரது உதவியாளர் விமல தாஸ் ஆகியோர் அல்லைப்பிட்டியில் காணாமல் போனார்கள்.
- 2006 - நமது ஈழநாடு பணிப்பாளரான, முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமகராஜா சுட்டுக்கொலை செய்யப் பட்டார்.

## பிறப்புகள்

- 1910 - ஈரோ சாரினென், கட்டிடக்கலைஞர் (இ. 1961)
- 1944 - ராஜீவ் காந்தி,இந்தியப் பிரதமர் (இ.1991)
- 1946 - நாராயண மூர்த்தி, இந்தியத் தொழிலதிபர்

## இறப்புகள்

- 1823 - பாப்பரசர் ஏழாவது பயஸ் (பி. 1740)
- 1854 - பிரீடரிக் ஷெல்லிங், ஜெர்மன் மெய்யியலாளர் (பி.1775)
- 1914 - பாப்பரசர் பத்தாவது பயஸ் (பி. 1835)
- 1915 - போல் ஏர்ள்ரிச், ஜேர்மன் அறிவியலாளர், மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1854)
- 1917 - அடொல்ஃப் வொன் பாயெர், ஜேர்மன் வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1835)
- 1961 -பேர்சி பிறிட்ஜ்மன், அமெரிக்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1882)

**1948 - "இலங்கை குடியுரிமை சட்டம்" இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் 10 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழி லாளர்களான இந்திய வம்சாவழித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.**



# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

1943 ஆம் வருடத்தில் விசேட கல்விக் குழுவின் விதப்புரைகளுக்கிணங்க, இதிலும் விரிவான புலமைப்பரிசில் முறையொன்று நிறுவப்பட்டது. திறமையுடைய வறிய பெற்றோர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். அக்கால கட்டத்தில் ஐந்தாம் வகுப்பில் புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தி அதில் சித்தியடைந்தோருக்கு கல்வி, உணவு, உடை என்பவற்றை அரசு கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் வகுப்பிற்கு மேல் கல்வி பெறுவதற்காகப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு மத்திய மகா வித்தியாலங்களில் விடுதி வசதி அளிக்கப்பட்டு கல்வி போதிக்கப்படும். எனவே இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றனர் எனலாம். இந்நடவடிக்கையானது ஏழை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனக் கூறலாம்.

அரசாங்கம் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, கிராமியக் கல்வி, மத்திய பாடசாலைகளை அமைத்தல், புலமைப்பரிசில் திட்டம் என்பவற்றின் மத்தியிலும் எல்லோரும் கல்வியில் பங்குபற்றுதலை ஊக்குவித்தலின் பொருட்டு, வேறும்பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலங்கையின் கல்வி வரலாற்றில் மதிய உணவு வழங்குதலும் ஒரு ஊக்குவிப்புத் திட்டம் ஆகும். 1931ஆம் ஆண்டுக்கு முன்னர், பல்வேறு உணவுத்திட்டங்கள் ஒழுங்கு முறையற்ற வகையில் ஆங்காங்கே சிற்சில பிரதேசங்களிலே கையாளப்பட்டு வந்தன. இத்தகைய திட்டத்தின்படி ஒரு பாடசாலையின் பெற்றோர் - ஆசிரியர் சங்கமானது அப்பிரதேசத்து தலதாபனத்திடம் உதவிப் பணம் பெற்று மாணவ ர்களுக்கு மதிய உணவு வழங்கியது. அவ்வுணவு விசுக்கோத்தாகவோ சோறும், கறியுமாகவோ காணப்பட்டது. கொழும்பு மாநகர சபையானது 1931 ஆம் ஆண்டில் நகரத்திலே குறைந்த வருமானம் உள்ள பகுதிகளிற் காணப்படும் தொடக்க நிலைப் பாடசாலைகளில் பயிலும் 800 மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவினை வழங்கியது. கொழும்புமாநகர சபை காட்டிய இந்த முன்மாதிரியைப் பின்னர் தலதாபனங்களும் பின்பற்றின.1934 ஆம் ஆண்டில் இலங்கையில் மலேரியா நோய் பரவியமை காரணமாகப் பாடசாலை செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. சுகம் அடைந்த பிள்ளைகளும் மந்த போஷனை காரணமாகப் பாதிக்கப்பட்டார்கள். கன்னங்கரா ஆரம்பகாலப்பகுதியில் அரசாங்க நிதியில் இருந்து சிரமத்துடன் பணம் பெற்று மலேரியாவினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த பாடசாலைகளுக்கு மட்டும் இலவச மதியபோசனம் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். படிப்படியாக ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்ட இவ்வேலைத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு சில இடங்களில் பாணும் சொதியும் ஒரு கிண்ணப்பாலும், இன்னும் சில இடங்களில் கஞ்சியும் வழங்கப்பட்டன. கல்வித் திணைக்களமானது இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய மதிய உணவுத் திட்டம் ஒன்றை 1945 ஆம் ஆண்டில் ஆரம் பித்தது. அக்காலம் வரையும் கைக்கொள்ளப்பட்ட இத்தகைய திட்டங்களுள் அதுவே மிக விரிவானது எனலாம். அதன் படி பாணோடு மரக்கறியேனும், சொதியேனும், தேங்காய்ப்பூ துவையலேனும் ஜாம் என்னும் பழப் பாணியேனும் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அரசாங்கத்தால் நடத்தப்படுவனவும் உதவி நன்கொடை பெறுவனவுமான சிங்கள, தமிழ் பாடசாலைகள் யாவும் விரிவான இத் திட்டத்திற்கு உட்பட்டிருந்தன. மத்திய பாடசாலைகளிலும், சிரேஷ்ட பாடசாலைகளிலும், இரு மொழிப்பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவரின் மொத்தத் தொகையில் 50 சதவீதமானோருக்கும் அவரவர் கனிஷ்ட பாடசாலைகளில் பயிலும் மாணவரில் 25 சதவீதமானவருக்கும் பணநிலைக்கேற்ப இத்தகைய உணவு வழங்கப்பட்டது. இந்த உணவோடு ஒரு கோப்பை தேநீரும் வழங்குவதற்கு உதவியாக இலங்கைத் தேயிலை பிரசார சபையானது, குறித்த ஒரு வட்டாரத்திற்கு வேண்டிய தேயிலையையும், சீனியையும் கொடுத்து வந்தது. இரண்டாம் உலகப் போரின் போது மிகப்பாரதூரமான உணவு நெருக்கடியான நிலையிலும் இலவச உணவுத் திட்டத்தை கடினமான சூழ்நிலையிலேயே கல்வித்திணைக்களம் நிர்வகித்து வந்தது. 1945 - 1946 ஆம் ஆண்டு வரையான நிதியாண்டில் இத்திட்டத்தால் ஏற்பட்ட செலவு விபரம் மேலே தரப்பட்டுள்ளது.

**1945 -1946 ஆம் ஆண்டு வரையுள்ள இலவச உணவுத் திட்ட செலவு விபரம்**

| வட்டார வகை | உணவு அளிக்க அதிகாரம் பெற்ற பாடசாலைகளின் தொகை | உணவு அளித்த பாடசாலைகளின் தொகை | உணவு பெற்ற மாணவர்களின் சராசரித் தொகை | மொத்தச் செலவு ரூ.ச. |
|---|---|---|---|---|
| மாநகரம் | 95 | 95 | 11507 | 149438.60 |
| நகரம் | 42 | 42 | 6474 | 63667.89 |
| நாட்டுப்புறம் | 4762 | 4526 | 507696 | 5650384.64 |
| மொத்தம் | 4899 | 4663 | 525677 | 5863491.13 |

*மூலம் :-எஸ்.பி.ஜெயசூரிய "கல்வித்துறையிற் பொதுநலச் சேவைகள்" இலங்கையிற் கல்வி," பாகம் II*

மேற்கூறப்பட்ட அட்டவணை மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் சராசரிச் செலவு ரூபா 11.15 ஆக இருந்தது. சராசரியாக 180 நாள் உணவு அழிக்கப்பட்டது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 58 இலட் சத்து 63ஆயிரத்து 491.13 ஆகும். 1947 ஆம் ஆண்டில் முதனிலைப் பாடசாலைகளில் கற்கும் மாணவரையும் முதல் நிலைக்கு மேற்பட்ட பிரிவுகளில் கற்கும் மாணவரையும் உள்ளடக்கும் வகையில் இந்த மதிய உணவுச் சேவை விரிவு படுத்தப் பட்டது. பின்னர் 1948 - 1949 ஆம் ஆண்டளவில் கனிஷ்ட ,சிரேஷ்ட மத்திய பாடசாலைகளிற் பயிலும் மாணவரின் மொத்த தொகையில் 50 சதவீதத்தினரை உள்ளடக்கும் வகையில், இந்த மதிய இலவச உணவுத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டது.

இவ்வாறான திட்டங்களுடன் பரீட்சை முறைகளிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. நடைமுறையில் இருந்த கேம்பிரிஜ், லண்டன் பரீட்சைகளை நீக்கி விட்டு அதற்குப் பதி லாக தேசிய பரீட்சைகள் பற்றி ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஆரம்பத்தில் கேம்பிரிஜ், சிரேஷ்ட பரீட்சையை நீக்கி விட்டு இலங்கையில் சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு பிற்காலத்தில் விஸ்தரிக்கப் பட்டது. (தொடரும்)

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

# ஒரு மொழிக்கொள்கை நாட்டிற்கு பெரும் சாபக்கேடாக அமைந்தது

## எஸ்.பி.நாவின்ன தெரிவிப்பு

எதிர்வரும் காலங்களில் அரச மொழிக் கொள்கையைக் கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுப்பேன் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்தார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, அரச கரும மொழிக் கொள்கைகள் மற்றும் தொடர்பான சட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் செயலமர்வு எனும் தொனிப்பொருளில் மாவட்டங்கள் அனைத்திலும் நடத்தவுள்ள செயலமர்வின் முதலாவது செயலமர்வு குருணாகல் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் குசும் ஹெட்டிகே தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்,நாட்டின் ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் அமைச்சொன்றை நான்பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த அமைச்சு தன்பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் மீண்டும் நாம் பிரியச் சந்தர்ப்பம் உள்ளது.

மொழிக் கொள்கையை ஒழுங்காகக் கடைப்பிடிக்காவிட்டால் நீதிமன்றம் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதை உயரதிகாரிகள் கருத்திற்கொள்ள வேண்டும். அனைத்து அரச நிறுவனங்கள், பாதைகள் என்பவற்றின் பெயர்கள் மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும்.

அரச சேவையில் இன்று 700 மொழி பெயர்ப்பாளர்கள் வரை தேவைப்படுகின்றனர். புதிய மொழிபெயர்ப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

அனைத்து சிங்கள அரச அலுவலர்களும் தமிழ் மொழியைக் கற்க வேண்டும். சமாதானம் பிறந்துள்ள இவ்வேளையில் சிங்கள அரச ஊழியர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு இடமாற்றம் பெற இடமுண்டு.

விரைவில் அரச கரும மொழிகள் திணைகளம் மூலம் அனைத்து முக்கிய மொழிகளையும் கற்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். 1961 ஜனவரி மாதம் முதலாம் திகதி தனிச் சிங்களத்தில் அரச கருமங்கள் மேற்கொள்ளப்பட்ட வேளை இரண்டு இலட்சம் அரச சேவையாளர்களில் 66 ஆயிரம் பேர் சிங்களத்தில் பணியாற்றக் கூடியவர்களாக இருந்தனர். தனிச் சிங்களம் நாட்டிற்கு சாபக்கேடாக அமைந்தது.

நாடு பிரிவினை நோக்கிச் சென்றமைக்குக் காரணம் தவறான மொழிக் கொள்கையே ஆகும். அன்றுவிட்ட பிழையை நாம் இன்று நிவர்த்தி செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

இது குறித்து சட்டத்தரணி உதித இஹலஹேவா உரையாற்றுகையில்,எல்லாள மன்னன் நாட்டை ஒன்றுபடுத்திய மன்னன். ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்த வேளை முன்னுரிமை பெற்ற மொழியாக தமிழே இருந்தது.இறுதியாகச் செய்யப்பட்ட கண்டிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள 11 சிங்கள பிரதானிகளில் 7 பேர் தமிழிலேயே கையொப்பமிட்டுள்ளனர். சுதந்திரத்தின் பின் கடைப்பிடிக்கப்பட்ட தவறான மொழிக் கொள்கையால் பலதைப் பலிகொடுத்து விட்டோம்.

எனவே இன்று நாம் மொழிக் கொள்கையை மாற்ற வேண்டியுள்ளது. அரச கரும மொழிக் கொள்கையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம். எமது மொழிக் கொள்கை அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ள போதிலும் போதியளவு பலாபலன்கள் கிடைக்கவில்லை என்றார்.

அரச கரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் எஸ்.குணசேன இங்கு உரையாற்றுகையில், அரச கரும மொழிகளை அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் நிறுவனத் தலைவர்களே ஆவர்.

அப்படி அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் உயர் நீதிமன்றில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அதில் தண்டனை வழங்கினால் மூன்று மாத சிறைவாசம் கிடைக்கலாம்.

பெயர்ப்பலகை, பாதைகள் அனைத்திலும் இரு மொழிகளிலும் அறிவித்தல்கள் இருக்க வேண்டும்.

அரச கரும மொழிகள் ஆணைக்குழு அலுவலர்கள் அரச நிறுவனங்களுக்கு விஜயம்செய்து மொழி அமுலாக்கல் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பர். அவர்களின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே இந்தச் சமாதானக் காலத்தில் அனைத்து மக்களையும் ஒன்று படுத்த மொழி பாலமாக விளங்கும் என்று கூறினார். (6-2)

## வரலட்சுமி பூஜை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த வரலட்சுமி பூசை இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

வரலட்சுமி காப்புப் பெற விரும்புவோர் தர்மகர்த்தா சபையினருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (6-2-10)

## மீன்சந்தை கட்டட புனரமைப்பு பணிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மீன்சந்தைக் கட்டிட திருத்த வேலைகள் மற்றும் வர்ணம் பூசும் வேலைகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் புதிய மலசலகூட குழி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.நடராஜா மேற்கொண்டு வருகின்றார். (6-2-10)

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பொதுச் சபைக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் 2008/ 2009 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலும் எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தலைவர் மா. நாகலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய கூட்டத்தில் ஏதாவது பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் எதிர்வரும் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு நேரிலோ அல்லது கடிதம் மூலமோ சங்க அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (6)



வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் வழிகாட்டலில் துணுக்காய், முல்லைத்தீவு வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இலங்கை முழுவதற்குமான சுற்றுலாப்பயணத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர். இதில் மாணவர்களுடன் ஆளுநர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# நெல்சிப் அபிவிருத்தி முன்மொழிவுகளை கொத்தணி ரீதியாக பார்வையிடமுடியும்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச சபை நெல்சிப் அபிவிருத்தி முன்மொழிவுகள் கொத்தணி ரீதியாக மக்கள் பங்கேற்புடன் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் இந்த அபிவிருத்தி அமைச் சிற்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாகச் சமர்ப்பிக்கப்படவுள் ளது எனவும் குறிப்பிடப்படுகிறது.

எனவே மக்கள் பங்கேற்புடன் தயாரிக் கப்பட்ட நெல்சிப் அபிவிருத்தி முன் மொழிவுகளை பொதுமக்கள் இன்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் எனவும் எதிர் காலத்தில் முன்னுரிமைப் பிரகாரம் நெல்சிப் அபிவிருத்திகள் முன்னெடுத்துச் செல்லப் படும் எனவும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி அறி வித்துள்ளார்.

(4-2)

# கேரதீவு- சங்குப்பிட்டிப் பாலத்தின் 55 வீத வேலைகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கேரதீவு -சங்குப்பிட்டி பாலத்திற்கான வேலைத்திட்டத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகம் ஆகியோர் நேற்று முன்தினம் பி.ப. 3 மணியளவில் நேரில் சென்று பார்வையிட்டு அது தொடர்பாக முகாமை யாளர் ஜி.ஏ.சிறிசேனவிடம் கலந்துரையா டினர்.

இது தொடர்பாக ஜி.ஏ.சிறிசேன தெரி விக்கையில் ,

இத்திட்டமானது 900 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 222 மீற்றர் நீளப் பாலம் நிறுவப்பட்டு வரு வதுடன் இதில் 55 வீத வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மிகுதி வேலைத் திட்டங்கள் ஒக்டோபர் மாத இறுதிக்குள் முழுமையாக பூர்த்தி அடைந்து விடும் என் றார்.

அத்துடன் இச்செயற்றிட்டத்திற்கு நாவற் குழி பிரதேச மக்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6-4)

# சட்டவிரோதமாக பணம் கடத்தியவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை வெளி நாட்டுப்பணத்தினை ஜப்பானுக்கு கொண்டு செல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் பயணப்பொதியிலிருந்து 43இலட்சம் ரூபா பெறுமதியான ஜப்பான் ஜென்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு குறிப்பிட்டது.

சந்தேக நபர் எம்பிலிப்பிட்டிய நகரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் விமான நிலைய சுங்கப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது. (6-4)

# தமிழர்கள் தம் வரலாறுகளை ஆவணப்படுத்தும் தன்மையற்றுக் காணப்படுகின்றார்கள்

## வேலணைக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்பிலிருந்து வெளியாகும் *தாய்* கத்தோலிக்க கலை இலக்கிய சஞ்சிகையின் எழுத்தாளர்களுடன் கலந்துரையாடல் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தில் எழுத்தாளர் செ.ஜோசப்பாலா தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பல எழுத்தாளர் கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை யும் ஆலோ சனைகளையும் முன்வைத்தனர்.

வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் குயில்ரஸ் திருஞானம் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நடைபெற்ற அனர்த் தங்கள் காரணமாக வட பகுதிக்கும் தென் பகுதிக்கும் இடையிலான தொடர்புகள் துண் டிக்கப்பட்டது. இதில் சிங்கள மக்களைக் காட் டிலும் தமிழர்களின் வரலாறுகளை ஆவணப் படுத்தும் தன்மையானது கடந்த ஆண்டுக ளில் குறைவாக இருந்தது.

குறிப்பாக கடந்த 20 வருடங்களாக ஆவ ணப்படுத்தல் என்பதே அருகிப் போயி ருந்தது. தமிழ் சினிமா போல ஏதோ ஒரு கதையை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண் டிருக்காமல் இப்போது இருக்கின்ற சூழ் நிலையில் 3 இனங்களுக்கும் எல்லா மதங் களுக்கும் சார்ந்த வகையில் சமூக சீர்த்திருந் களை மற்றும் அறிவியல் கருத்துக்களைவெளிப் படுத்தும் நோக்கில் எழுத்துக்கள் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் தாய் சஞ்சிகையின் இணையாசி ரியர் செ .ஞானபிரகாசம் உரை நிகழ்த்துகை யில், தென்பகுதி, வட பகுதி தொடர்புகள் மீண் டும் புதுப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் கொழும்பில் பல கத்தோலிக்கர்களது உரிமை கள் தடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரி வித்தார். (6-51)

# ஜனாதிபதி மஹிந்தவின்....

10ஆம்பக்கத்தொடர்ச்சி...

ஜெனரல் சரத் பொன்சேகா என்பவர் யார்? ரணில் தலை வைக்க வேண்டிய தண்டவாளத்தில் தன் தலையை வைத்து ரணிலைக் காப்பாற்றிய மனிதர் ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடாவிட்டால் மஹிந்த ராஜபக்ஷவுடன் ரணிலே போட்டியிட்டிருப்பார். தோல்வி, பயம் காரணமாகவே ரணில் போட்டியிடவில்லை. அந்தத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி யடைந்திருந்தால் ரணில் வீட்டிற்குச் சென்றிருப்பார். அப்படி நடந்தி ருக்குமானால் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ரணில் பாயைச் சுருட்டிக் கொண்டு வீட்டுக்குச் சென்றிருப் பார்.

இதனை அறிந்து கொண்ட ரணில் எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக ஜெனரலை களமிறக்கினார். அப்போது மஹிந்தவின் வெட்டு குத்துகளைப் பொறுத்துக் கொள்ளாத மனநிலையில் பொன்சேகா காணப்பட்டார். அவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இருந்திருப்பாரா யின் பாதுகாப்பு அமைச்சு அல்லது மிக முக்கியமான அமைச்சொன்று அவருக்குக் கிடைத்திருக்கக் கூடும்.

மஹிந்த, பொன்சேகாவிற்கு பிரதமர் பதவியை வழங்குவதாக உறுதியளித்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற உறுதிமொழியின் படி அவர் இந்த வாக்குறுதியை வழங்கியிருந் தார். ஜெனரல் பொன்சேகா ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடாது அரசியலில் ஈடுபடாதிருந்திருந்தால் இராணுவத்தில் அவர் வகித்த பதவியை தொடர்ந்தும் அவர் வகிக்க வாய்ப்பு கிடைத்திருக்கும்.

எனினும், ரணில் தனது கழுத்தைக் காப்பாற்றிக்கொள் வதற்காக பொன்சேகாவை பொது வேட்பாளராக போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டார். மஹிந்த விற்கும்,பொன்சேகாவிற்கும் இடையில் நிலவும் முறுகலை அவர் இதற்குப் பயன்படுத்திக் கொண் டார். பொன்சேகா மஹிந்தவின் கோரிக்கைகளைப் புறந்தள்ளி விட்டு ரணில் மீது நம்பிக்கை வைத்து ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினார். ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்பு உரிய முறை யில் பணியாற்றவில்லை. இதனால் பொன்சேகா மாத்திரமல்ல அவரது தேர்தல் பிரசாரங்களும் பாதிக்கப் ப்பட்டன. ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்து பொன்சேகா கைது செய்யப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அவரிடமிருந்து விலகிக் கொண்டது. அன்று முதல் இன்று வரை ரணில் பல தடவைகள் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் ரணிலுக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்காகவும் கழுத்தைக் கொடுக்கப் போய் தூண்டிலில் மாட் டிக்கொண்ட பொன்சேகா குறித்து ஒருவார்த்தைக் கூடபேசவில்லை.

நாம் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம். பொன்சேகாவை விடுதலை செய்யுங்கள் எனக் கூறுவ தற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு முதுகெலும்பிருக்கவில்லை. ரணிலுக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்காகவும் தனது கழுத்தைக் கொடுத்த பொன்சேகா சிறையில் துன்பப்பட்டு வரும் நிலையில் ரணிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் மஹிந்தவுடன் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டு தேநீர் அருந்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் மஹிந்தவின் சிற்றுண்டியை ருசித்தது மாத்திரமல்லாது அரசியல் அமைப்புத் திருத்த பேச்சுவார்த் தைகள் எனக் கூறி அமைச்சர்களின் வீடுகளுக்குச் சென்று சிற்றுண்டி சாப்பிட அதிக ஆவலை வெளிப்படுத்துகின்றனர்.

1947ஆம் ஆண்டு அரசியலமைப்பைத் தவிர நாட்டில் இரண்டு அரசியலமைப்புகள் உருவாக்கப்பட்டன. 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு மற்றும் 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு என்பனவே அந்த இரண்டு அரசியலமைப்புகளாகும். 72ஆம் ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாட்டின் பிரதமராக இருந்தார். ஜே.ஆர்.அப்போது எதிர்க்கட்சித் தலைவர். முதலில் அரசாங்கம் குடியரசு அரசியல் யாப்பு யோசனையை முன்வைத்தது. ஜே.ஆர் உம் ஐக்கிய தேசியக் கட்சியும் மாற்று யோசனைகளை முன்வைத்தன. ஜே.ஆர்.அலரி மாளிகைக்குச் சென்று பிரதமருடன் சிற்றுண்டி சாப்பிட்டு, விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சர்களின் வீடுகளுக்குச் செல்லவில்லை. அதேபோல், 78ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது அன்று எதிர்க்கட்சித் தலைவர் அமர்தலிங்கமோ, ஸ்ரீமாவோ பண்டார்நாயக்கவோ பிரதமரான ஜே.ஆர்.ஐச் சந்தித்து, சிற்றுண்டிகளை உண்ணவில்லை. அவர்கள் யோசனைகளை மாத்திரமே முன்வைத்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ளப்போவதில்லை என்ற எழுத்து மூலமான வாக்குறுதியை ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏன் பெற்றுக்கொள்ள முடியாது?


இதனைத் தான் வெட்கமில்லாத தன்மையெனக் கூறுவார்கள். முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியை உறவினர்களின் கட்சியெனக் கூறுவார்கள். தற்போது வெட்க மில்லாதவர்களின் கட்சியென்று கூறவேண்டும். எந்தவொரு ஐக்கியமும் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சி அல்லது நன்றி மறந்தவர்களின் கட்சியென்றே கூறலாம்.

நன்றி:-குளோபல் தமிழ் நியூஸ்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# சூரியக் கலங்களில் ஒளியுணர் சாயங்களின் பயன்பாடு

உலகில் காணப்படும் சக்தி வளங்களை மீளப் புதுப்பிக்கப்படக் கூடியவை, மீளப் புதுப்பிக்கப்பட முடியாதவை என இரு வகைப் படுத்தலாம். மீளப் புதுப்பிக்கப்படக் கூடியவற்றில் சூரியனால் கதிர்க்கப்படும் வெப்பம், ஒளி மற்றும் காற்று, உயிரியல் தொகுதி (Bio mass) போன்றன அடங்கும்.




மீளப் புதுப்பிக்கப்பட முடியாத சக்தி வளங்களாக நிலக்கரி, எண்ணெய் வகைகள், இயற்கை வாயு என்பன காணப்படுகின்றன. இவற்றின்பாவனையினால் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதாவது அமில மழை (Acid rain), பூமி வெப்பமாதல் (Global worming) , ஓசோன் படை சிதைவடைதல் (Ozone layer Depletion ) போன்றனவாகும்.

தொழிற்சாலைகள், அனல் மின் உற்பத்தி நிலையங்கள், வாகனங்கள் , வீடுகள் போன்றவற்றில் சுவட்டு எரிபொருட்களின் பாவனையினால் சூழலில் காபனீரொட்சைட்டு ($Co_2$) , காபனோரொட்டைசட்டு(Co) போன்ற வாயுக்களின் செறிவு விரைவாக அதிகரிக்கின்றது.

நிலக்கரி பாவனை, பெற்றோலிய எரிபொருட்களின் பல்வகைப்படுத்தப்பட்ட இறப்பர் போன்றவற்றின் தகனத்தினால் வளி மண்டலத்தில் கந்தகவீரொட்சைட்டின் ($So_2$) அளவு அதிகரிக்கின்றது. $Co_2$ வாயு மழைநீரில் கரைவதனால் மழைநீர் சிறிதளவு அமில இயல்பைப் பெறுகின்றது. $So_2$ வாயு மழைநீரில் கரைவதனால் மழைநீரின் அமிலத்தன்மை மிக அதிகமாகின்றது. எனவே அமிலமழைக்கு மிக முக்கிய காரணம் வளிமண்டலத்தில் $So_2$அளவு அதிகரிப்பே ஆகும்.

வளிமண்டலத்தில் $Co_2$ வாயுவின் வழமைக்கு மாறான அதிகரிப்பினால் பூமி வெப்பமாதல் ஏற்படுகின்றது.

அத்துடன் வளிமண்டலத்தில் உயர்செறிவில் காணப்படும் $Co_2$, மெதேன்($CH_4$) குளோரோபுளோரோகாபன் (CFC), நீராவி போன்றன பச்சைவீடாக தொழிற்படுகின்றன. சூரியனால் கதிர்க்கப்படும் வெப்பக் கதிர்களில் பெருமளவு பூமியை வந்தடைந்து பின் தெறிப்படைகின்றன. இப்பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பினால் தெறிப்படையும் வெப்பம் மீண்டும் பூமியை வந்தடைகின்றது. இச் செயற்பாட்டினால் பூமி வெப்பமடைகின்றது.

ஓசோன்படலம், உயர் சக்தி கொண்ட ஊதா கடந்த கதிர்கள் (UV) சூரியனில் இருந்து பூமியை வந்தடையாது பாதுகாக்கின்றது. குளோரோ புளோரோ காபன் (CFC) , நைத்திரிக்கொட்சைட்டு (No) போன்ற வாயுக் கள் ஓசோன் வாயுவை ($O_3$) ஒட்சிசன் வாயு வாக மாற்றுகின்றன.

சூரிய சக்தியை உறிஞ்சி குளோரின் அணுக்களை கொடுக்கின்றது.

$$Cl_{(g)} + O_3 \rightarrow ClO_{(g)} + O_{2(g)}$$

$$No_{(g)} + O_3 \rightarrow No_{2(g)} + O_{2(g)}$$

இச் செயன்முறைகளினால ஓசோன் படை சிதைவடைகின்றது. இதனால் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டு சக்தி கூடிய UV கதிர்கள் பூமியை வந்தடைகின்றன.


சூரியக்கலங்கள் சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்றுவதில் பயன்படுகின்றன. சூரியக் கலங்களின் பாவனையினால் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. எமது பிரதேசத்தில் பரவலான சூரிய ஒளி கிடைப்பதனால் இக் கலங்களை பயன் படுத்தி இலகுவாக எமது மின்சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

இவற்றில் சூரியசக்தி மின்சக்தியாக மாற்றப்பட்டு சேமிக்கப்படுகின்றன. சூரிய சக்தி கிடைக்காத காலங்களில் இவற்றைப் பயன்படுத்தலாம். சூரியக் கலங்களில் பல் வேறு வகைகள் காணப்படுகின்றன.

சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக் கலங்களை (Dye sensitized solar cells) கருதும்போது, இச் சூரியக்கலங்கள் தற்போது கல்விசார் துறைகளிலும் வர்த்தகத் துறைகளிலும் சூரியசக்தியை மின் சக்தியாக மாற்றுவதில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சாயத்திற்கு உறுத்துணர்ச்சி உள்ள சூரியக்கலங்கள் தற்பொழுது எல்லா இடங்களிலும் பெறக் கூடியதாக உள்ளது. சாயத்திற்கு உணர்ச்சியுள்ள மெல்லிய படலம் (Dye sensitized thin film) உலகளாவிய ரீதியில்17 ஐப்பசி 2007 இல் முதன் முறையாக தரவரிசைப்படுத்தப்பட்டது. சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக்கலம் மலிவானதாகவும், மற்றைய சூரியக்கலங்களுடன் ஒப்பிடும் போது வினைத்திறன் கூடியதாகவும் காணப்படுகின்றது. இதன் தொழிற்பாடு பச்சைத் தாவரங்கள் ஒளிச்சக்தியை உறிஞ்சி இரசாயன சக்தியாக மாற்றும் ஒளித்தொகுப்பு செயன்முறையை ஒத்தது. இங்கு பயன்டுத்தப்படும் சாயங்கள்(Dyes) சூரியக் கதிர்களில் உள்ள கட்புலன் பகுதிக்குரிய (Visible xgion) கதிர்களை அகத்துறிஞ்சம் ஆற்றல் உள்ளவை.

இக்கலங்களில் தைத் தேனியம் ஈரொட்சைட்டு ($TiO_2$) குறை கடத்தி பிரதான மூலமாக பயன்படுத்தப்படுகின்றது. இதில் இணைக்கப்பட்டிருக்கும் $TiO_2$மலிவானதாகவும் இலகுவில் கிடைக்கக் கூடியதாகவும்




உள்ளது.

சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரிய கலங்களை அவற்றில் பயன்படுத்தப்படும் மின் பகு பொருளின் அடிப்படையில் மூன்று வகைப்படுத்தலாம்.

1.திரவ மின் பகுபொருள் கொண்ட சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக் கலங்கள் (liquid elecrolyte dye sensitized solar cell)

2. திண்மத்திற்கும் -திரவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் மின் பகுபொருளைக் கொண்ட சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக் கலங்கள்

(Quasi solid- state dye sensitized solar cell)

3. திண்ம மின்பகுபொருள் கொண்ட சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக் கலங்கள்

(Solid state dye sensitized solar cell)

### திரவ மின்பகுபொருள் கொண்ட சாயத்திற்கு உணர்ச்சியுள்ள சூரியக் கலங்கள்

இங்கு பயன்படுத்தப்படும் சாயம் (S) சூரிய ஒளியிலிருந்து போட்டானை (Photon) உறிஞ்சி தரைநிலையிலிருந்து அருட்டப்பட்ட நிலையை அடையும்.($S^*$) அருட்டப்பட நிலையை அடைந்து சாயம் இலத்திரனை இழந்து ஒட்சியேற்றப்பட்ட நிலையை அடையும்.($S^+$) பின்னர் மின்பகு பொருள் $I^-$ ஆனது $I_3^-$ஆக ஒட்சியேற்றப் படும்போது ஒட்சியேற்றப்பட நிலையில் உள்ள சாயம் $S^+$ஆனது Sஆகத் தாழ்த்தப்படும்.அதாவது சாயம் தரைநிலையை அடையும். இங்கு நடைபெறும் தாக்கங்கள் பின்வருமாறு,

$$S + h\nu \rightarrow S^*$$

$$S^* \rightarrow S^+ + e$$

$$S^+ + {}^3/_2 I^- \rightarrow S + {}^1/_2 I_3^-$$

$I^{3-}$ (கதோட்டு) + 2e $3I^-$ (கதோட்டு)

இங்கு பயன்படுத்தப்படும் சாயமானது $TiO_2$ தட்டுகளில் மேற்பரப்பில் உறிஞ்சப்பட்ட நிலையில் காணப்படும். எனினும் இக் கலங்களில் அவசியமற்ற ஒரு சில தாக்கங்களும் நடைபெறுகின்றன. (தொடரும்)

**ஜெயகாந்தன் கேதாரகௌரி**
இரசாயனவியல் துறை,
உதவி விரிவுரையாளர்.
யா/பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 28

**எட்டு எட்டுக்களை மட்டும் பயன்படுத்தி எண்கணித செய்கைகளின் மூலம் 1000 என்ற எண்ணைப் பெறுவது எப்படி?**

**விடைகளை 08-09-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 26க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**T.சிந்துஜா**
**40 ,கச்சேரி கிழக்கு ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**புதிர் 27 இற்கான விடை: கந்தகவீரொட்சைட்டு ($So_2$)**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 28

சரியான விடை :..............................
முழுப்பெயர் :..............................
முகவரி :..............................
:..............................
கையொப்பம் :..............................

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
-மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மங்கள முனசிங்க கூறிய உண்மைப் பொருள்

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு மேற் கொண்டுவரும் விசாரணைத் தொடரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க சாட்சியமளித்தார்.

அவர் அளித்த சாட்சியம் இந்த நாட்டில் இன யுத்தம் ஏற்பட்டதற்கான சாட்சியமாகும். அதாவது தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு சிங் களக் காடையர்களும், பௌத்த துறவிகளுமே மூலகாரணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மங்கள முனசிங்க கூறிய உண்மை இந்த நாட்டின் வரலாற்றில் முக்கிய விடயமாகும்.

எவரும் துணிந்து கூற முடியாத உண்மையை சிங்களவரான மங்கள முனசிங்க கூறியதிலிருந்து, ஒட்டுமொத்த சிங்களவர்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பது நிரூபணமாகியுள்ளது.

அதேநேரம் தவறு எங்குள்ளதென்பதை அவரின் வாக்குமூலம் இனங்காட்டியுள்ளது.

காலத்திற்குக் காலம் இனக்கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களை கொல்லுவதும் அவர்களின் உடமைகளைக் கபளீகரம் செய்வதும் இனத்துவேசத்தைத் தூண்டுவது என மிகப்பெரும் கொடூரம் இந்த நாட்டில் அமுலாகிக் கொண்டிருந்தது.

ஆட்சியாளர்கள் எவரும் அதனைத் தடுக்க முற்பட்டிலர். சில சந்தர்ப்பங்களில் அரசாங்கமே இனக்கலவரத்தைத் தூண்டி தமிழ் மக்களை கொன்றொழித்தது.

இதன் காரணமாகவே, தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்பட்டனர்.

சிங்கள இனவாதிகளும் பௌத்த துறவிகளும் ஊற்றிய எண்ணெய் இனவாதத் தீயாக கொழுந்து விட்டெரிந்து இலட்சக்கணக்கான மனித உயிர்களைப் பொசுக்கியது. இந்த உண்மையைத் தான் மங்கள முனசிங்க கூறியுள்ளார்.

இந்த உண்மைகள் முன்னரும் இனப்பாகுபாடற்ற சிங்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்டபோது அவர்களைச் சிங்களத்தின் எதிரிகளாகப் பேரினவாதிகள் முத்திரை குத்தினர்.

சோக்கிரட்டிஸ் அறிவியலைக் கூறியபோது அதனை ஏற்க மறுத்து வெகுண்டெழுந்த கிரேக்க மக்களின் நடவடிக்கையைக் கூட அக்கால நிலைமையைக் கருத்தில் கொண்டு நியாயப்படுத்த முடியும். ஆனால் சிங்களப் பேரினவாதிகளோ இன்னமும் சோக்கிரட்டிஸின் அறிவியலை எதிர்த்த மக்களின் நிலையிலிருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

மங்கள முனசிங்க ஓர் உண்மையைக் கூறினார் என்பதைத்தவிர, அந்த உண்மையின் அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நம்புவது அறியாமை. அவ்வளவுதான்.


# வேண்டும் வரம் தரும் வரலட்சுமி விரதம்

மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டுமாயின் அதற்கு எமக்கு வாழ்விற்கு அத்தியாவசியமான அட்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கவேண்டும். அட்டஐஸ்வர்யங்களையும் மகாலட்சுமியே தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, ஜயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி என்ற பல்வேறு வடிவங்களுடன் இருந்து வேண்டுவார் வேண்டுவாத ஈந்து அருள் பாலிக்கின்றாள்.

எம்நல்வாழ்விற்கு அருள்புரியும் மகாலட்சுமியை வருடந்தோறும் வரலட்சுமி விரதநோன்பிருந்து வழிபாடுகள் செய்து வரலட்சுமி நோன்புக் கயிற்றினைக் கையில் அணிந்து மக்கள் கொண்டாடுகின்றார்கள்.

வரலட்சுமியை இருக்கு வேதமானது அருளுக்கும் ஆக்கத்திற்கும் தெய்வமாகவும் யசுர்வேதம் சூரிய மண்டலத்தின் நடுவே பேரொளி வீசிய வண்ணமாக மகாலட்சுமி வீற்றிருப்பதாகவும்; அதர்வன வேதமானது நல்லது கெட்டதான தேவதைகளை விபரித்து மகாலட்சுமி நல்லதை செய்பவளாகப் போற்றுகின்றது.

வேண்டும் வரம் தரும் வரலட்சுமியான மகாலட்சுமியை வரலட்சுமி விரத நன்நாளிலே வழிபாடுகள் செய்வதன் மூலம் பல துன்பங்களிலிருந்தும் விடுபடலாம் எனப் புராண வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன.



எனவே வரலட்சுமி விரத நன்நாளிலே அன்னை மகாலட்சுமியை வழிபட்டு நாமும் இவ்வுலக வாழ்வில் இலட்சுமி கடாட்சம் பெற்று வாழ்வோமாக.

*ஆதிமுதலே அன்னையே*
*அனைத்தின் உட்பொருளே*
*அகரமுதல அன்பிற் கினிய*
*அமுதே ஞானதேனே*
*அளவிலா அருட் பெருங்*
*கடலே வாசி முகமே*
*அடியேனுள் புகுந்து விளையாடும் ரவிமதியே*
*அடிபணிந்தேன் உன்னை அருள்புரிவாயே.*

நீர்வைமணி

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வரலட்சுமி விரதத்தின் மகிமை

ஆவணி மாதம் சுக்கிலபட்சத்து வெள்ளிக்கிழமைகளில் மங்கையர் அனுஷ்டிக்கும் முக்கியமான பண்டிகை வரலட்சுமி விரதம். இது வரங்களை அள்ளிக் கொடுக்கும் வரலட்சுமியைக் குறித்து அனுஷ்டிக்கப்படுகிறது.

மணமான பெண்கள் தலை நோன்பு நோற்பது இந்த விரதத்தின் ஒரு விஷேசமான வைபவமாகும். மாங்கல்யம் நிலைத்து இருக்கவும், வீட்டில் எப்போதும் சுபீட்சம் நிலவவும், இலட்சுமியின் அருள் கிடைக்கவும் இந்தப் பூஜை அவசியமாகக் கருதப்படுகிறது. செல்வத்திற்கு அதிபதி மகாலட்சுமி. இவள் பாற்கடலில் அவதரித்தவள். பெண்களுக்கு மங்கலத்தைத் தருபவள். மகாவிஷ்ணுவின் இதயத் தாமரையில் கொலுவீற்றிருப்பவள். அவளைப் பூஜீத்தால் குடும்பத்தில் மங்கலமும், குடும்பத் தலைவனுக்கு நல் ஆயுளும், எல்லா நலன்களும் கிடைக்கும்.

மகாலட்சுமி எட்டு வடிவங்களில் காட்சி தந்து ஐஸ்வர்யங்களை தருகிறார். தனலட்சுமி, தான்யலட்சுமி, கஜலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, தைரியலட்சுமி, வித்யாலட்சுமி என 8 நிலைகளில் பெயருக்குத் தமகுந்தபடி தனித்தனி வடிவம் தாங்கி இருக்கிறாள்.

## 'அற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் "அற்றைத் திங்கள்" கூத்துருவ நாடகம் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்கான ஆசன பதிவுகளை அலுவலகத்தில் மேற் கொள்ள முடியும் எனவும் நிகழ்வில் அனை வரையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலா மன்றத்தினர் கேட்டுள்ளனர். (6)

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

கரவெட்டி பிரதேச செயலக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா.மகேந்திரன் தலைமையில் நடை பெற வுள்ளது.

இக்கூட்டத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக மேற்படி சங்கத்தின் செயலாளர் ம.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (6-4-51)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 136

திருக்கோயில் வழிபாடு என்னும் நடைமுறை மனதைப் பண்படுத்தும் ஒரு செயற்பாடாகும். சுயநலமான போக்கினை விடுத்துப்பரநலமான செயற்பாட்டிற்கு இது இட்டுச் செல்லும் மெய்யடியார் பலர் கோயில் வழிபாட்டால் மனப்பக்குவம் பெற்றுள்ளனர். அத்தகைய அடியார்கள் தமது அனுபவத்தைப் பிறருக்கும் எடுத்துக் கூறவிரும்பியுள்ளனர். அதற்கென அவர்கள் பயன்படுத்திய எடுத்துரைப்பு முறைமையே தேவாரத்திருப்பதிகங்கள் ஆகும். பக்திபரவச நிலையிலே திருக்கோயில்களின் சிறப்பையும் அங்கு உறையும் இறைவன் திரு அருட்கோலங்களையும் பாடல்களிலே வெளிப்படுத்தியுள்ளனர் அப்பாடல்களிலே சொல்லப்பட்ட செய்திகள் எம்மையும் பரவச நிலைக்கு இட்டுச் செல்லவனவாக உள்ளன.

மாதோட்டம்எனப்பெயர்பெற்ற நல்லநகரிலேஅமைந்திருக்கும் திருக்கேதீஸ்வரம் என்னும் அற்புதமான திருக்கோயில் சுந்தரர் அத்தலம் பற்றிப் பாடியுள்ள பதிகம் மிகவும் பரவச நிலையை ஊட்டும் சொற்கோலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கடற்கரையில் அமைந்துள்ள திருக்கோயிலின் சூழலைப் பற்றிச் சொல்லும் போது சுந்தரர் **வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்** எனக் குறிப்பிட்டுள்ளார். **வங்கம்** என்னும் சொல் கடல்வழியாகப் பொருட்களை ஏற்றிச் செல்லும் ஒரு போக்குவரத்து ஊர்தியாகும். இச்சொல் இன்று மருவி **வத்தை** எனப்பயன்படுத்தப்படுகிறது. பல்வேறு இடங்களிலிருந்து பொருட்கள் கொண்டுவரப்படும் ஒரு துறைமுகமாக மாதோட்டம் விளங்கியதைச் சுந்தரர் ஆவணப்படுத்தி யுள்ளார். **மலிதல்** என்ற சொல் பெருக்கத்தைக் குறிப்பதாகும்.

வழிபாட்டு நிலையில் திருக்கேதீச்சரம் பற்றிய சிறப்பான குறிப்பு ஒன்றையும் சுந்தரர் சுட்டியுள்ளார். **அங்கம்மொழி அன்னாரவர்** என்ற தொடர் உடல்மொழி பற்றிய குறிப்பாகவுள்ளது. மனத்து உணர்வுகளைச் சொற்களால் வெளிப்படுத்தாமல் உடல் உறுப்புகளால் வெளிப்படுத்தும் நிலை ஒன்றுண்டு. இது பற்றி நாவுக்கரசரும் குறிப்பிட்டுள்ளார். வழிபாட்டுநிலையில் பயன்படும் உடல் மொழியைப் பக்திநிலையில் நிற்பவரே உணரமுடியும். திருக்கேதீஸ்வரம் தேவராலும் வழிபட்டுப் பெருமைப்படுத்தப்பட்டதையும் சுந்தரர் எடுத்துக் கூறியுள்ளார்.

திருக்கோயிலில் வீற்றிருந்து அருள் செய்கின்ற இறைவனுடைய திருக்கோலம் இரண்டு அடிகளில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. **பங்கம் செய்த பிறை சூடினான்** என்ற தொடர் இறைவன் திருமுடியிலே சூடியுள்ள பிறை பற்றிய குறிப்பாகும். அது பற்றியவர் கூறும்போது பங்கம் செய்த

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பிறை என்று கூறியுள்ளார். முழுநிலவைப் பங்கச் செய்த தோற்றத்தை நினைவுபடுத்துகிறார். சிவன் திருமுடியிலே அணிந்துள்ள துண்டப்பிறை முழுநிலவிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட துண்டம் எனக் காட்சிப்படுத்துகிறார். பிறையோடு இறைவன் இடுப்பிலே சிவந்த கண்களையுடைய பாம்பை அணிந்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். சிவனின் சிறப்பான தோற்றத்தை நாமும் மனக்கண்ணில் காண வைத்துள்ளார்.

*"அங்கம் மொழி அன்னாரவர் அமரர் தொழுதேத்த*
*வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரிற்*
*பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்*
*செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே"*

# ரஷ்யாவில் வாட்டியெடுக்கும் வெயில்; ஆயிரக்கணக்கான மக்கள் பலி



(மாஸ்கோ)

ரஷ்யாவில் வரலாறு காணாத கோடை வெப்பத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகியுள்ளனர். குளிர் பிரதே சமான ரஷ்யாவில் இந்த ஆண்டு கோடை வெப்பம் வாட்டி யெடுக்கிறது. 104 டிகிரி பரனைற் அளவுக்கு வெயில் காய்கிறது. இதனால் ரஷ்யாவில் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உணவு உற்பத்தி கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

நிலைமை சீராகும் வரை கோதுமை ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்துள்ளது. இதற்கிடையே மாஸ்கோவை ஒட்டியுள்ள காடுகளில் ஏற்பட்ட தீயில் சிக்கி 54 பேர் பலியாயினர். இந்தக் காட்டுத் தீயால் 134 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. காட்டுத் தீயினால் ஏற்பட்ட புகை மொஸ்கோ உள்ளிட்ட நகரங்களை சூழ்ந்துள்ளது. இதனால் ஏராளமானவர்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளது. கடந்த 2003 ஆம் ஆண்டு ஐரோப்பிய யூனியனில் இதே போன்று கடும் கோடை வெயில் மக்களை வாட்டியெடுத்துள்ளது.

அந்தக் கோடைக்கு 50 ஆயிரம் பேர் பலியானார்கள். அதன் பின் அவர்கள் கோடையை சமாளிக்கும் வழிமுறைகளை கண்டறிந்தனர். ரஷ்யாவுக்கு இந்த அனுபவம் இல்லாததால் கடந்த மாதத்தில் மட்டும் கோடை உஷ்ணத்தை தாக்குபிடிக்க முடியாமல் ஆறாயிரம் பேர் வரை பலியாகியுள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் கடந்த 9 ஆம் திகதி ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளில் 700 பேர் பலியாகியுள்ளனர்.

குளிர் பிரதேசமான ரஷ்யாவில் மருத்துவமனைகள் ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் அம்புலன்ஸ் வண்டி என எதிலும் ஏ.சி. கிடையாது. எனவே தற்போதைய வெப்ப தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களை ஏ.சி. அறையில் வைத்து சிகிச்சை அளிக்க முடியாமல் மருத்துவமனை நிர்வாகங்கள் திணறுகின்றன.

இதே போன்ற வெப்பநிலை தொடர்ந்தால் துருவ பிரதேசங்கள் ஒரு சில ஆண்டுகளில் மறைந்து விடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (6-2)

## பாடசாலையின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 17 குழந்தைகள் பலி

(உத்தரகாண்ட்)


உத்தரகாண்டின் கப்கோட் பகுதியில் மேகம் வெடித்துக் கொட்டிய கனமழையினால் பாடசாலையின் மேற்கூரை ஒன்று விழுந்து நொறுங்கியதில் குழந்தைகள் பலர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 17 பாடசாலைக் குழந்தைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக சரஸ்வதி சிஷு மந்திர் பாடசாலையின் மேற்கூரையும் கட்டடங்களும் விழுந்து நொறுங்கியுள்ளன.

இடிபாடுகளில் சிக்கியுள்ள பாடசாலைக் குழந்தைகளை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

கனமழை காரணமாக தொலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முழு சேத விவரம் குறித்த தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை. (6-2)



பாகிஸ்தான் முல்தான் அருகில் முசாபர்கரில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வாகனங்களில் மக்கள் இடம் பெயரும் காட்சி.

## பிலிப்பைன்சில் பஸ் விபத்து; 35 பேர் உயிரிழந்துள்ளனர்



பிலிப்பைன்ஸ் மலைப்பாதையில் சென்றுகொண்டிருந்த பேரூந்து 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

வடக்கு பிலிப்பைன்ஸ் பெங்குயெட் மாகாண சப்லான் நகரிலுள்ள பங்கான் கிராம மலைப்பகுதியில் வைத்து நேற்று இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

பேரூந்தில் பயணித்த 47 பிலிப்பைன்ஸியரில் 35 பேர் உயிரிழந்தனர்.

மலைப்பகுதியில் இருந்து திருப்புகையில் பேரூந்து பிரேக் இன்றி பள்ளத்தில் குடைசாய்ந்ததாக உள்ளூர் தீயணைப்புப் பகுதியின் சிரேஷ்ட அதிகாரி ரிச்சர்ட் வில்லனோவா தெரிவித்தார்.

மீட்புப் பணியாளர்கள் பேரூந்தினுள் சிக்குண்ட சடலங்களை மீட்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (6-2)

## பேஸ்புக்கில் இராணுவ புகைப்படங்களை வெளியிட்டமைக்கு கண்டனம்

பேஸ்புக் இணையதளத்தில் புகைப்படங்களை வெளியிட்ட இஸ்ரேல் பெண் இராணுவ வீராங்கனைக்கு இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அரசுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஈடன் அபெர்ஜில் என்ற பெண் அந்நாட்டு இராணுவத்தில் பணிபுரிந்து வந்தார்.

இவர் இராணுவத்தில் பணியாற்றிய போது எடுக்கப்பட்ட சில போட்டோக்களை இராணுவம் என் வாழ்க்கையில் முக்கியமான காலம் என்ற தலைப்பில் பேஸ்புக் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

இதில் இடம்பெற்றுள்ள இரண்டு புகைப் படங்களில் இராணுவ உடையுடன் ஈடன் இருக்கிறார். பின்னணியில் பாலஸ்தீனியர்கள் சிலர் கைகள் மற்றும் கண்கள் கட்டப்பட்ட நிலையிலுள்ளனர். இதுதவிர நண்பர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் பணியில் இருந்த போது எடுக்கப்பட்ட மேலும் 26 புகைப் படங்களையும் வெளியிட்டுள்ளார்.

அவரை தொடர்பு கொள்ள முயன்ற போது, பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பாலஸ்தீன அரசு, இஸ்ரேல் இராணுவம் பாலஸ்தீனியர்களை எப்படி எல்லாம் துன்புறுத்துகிறது என்பதற்கு இது சிறந்த உதாரணம் என தெரிவித்துள்ளது. (6)

## கருணாநிதி–ஜெயலலிதா 23 ஆம் திகதி நேரில் சந்திப்பு?

(சென்னை)

தமிழக தலைமை தகவல் ஆணையரைத் தேர்ந்தெடுப்பதற்காக எதிர்வரும் 23 ஆம் திகதி முதலமைச்சர் கருணாநிதியும் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவும் சந்தித்துக் கொள்வார்களா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழக தலைமை தகவல் ஆணையர் எஸ்.ராமகிருஷ்ணனின் பதவிக்காலம் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. எனவே புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அரசின் விதிப்படி முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாநில அமைச்சர் ஒருவர் ஆகியோர் கூடி புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கடந்த அ.தி.மு.க ஆட்சியின் போது தலைவரைத் தேர்ந்டெடுக்கும் போது அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறைக்கு அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பேராசிரியர் அன்பழகன் நேரில் சென்று கலந்து கொண்டார்.

இம்முறை முதலமைச்சர் கருணாநிதியின் அறைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா நேரில் செல்வார் என்ற எதிர்பார்ப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (6-2)

## தலை சிறந்த தலைவர்களில் மன்மோகன் சிங் முதலிடம்

அமெரிக்காவின் நியூஸ்வீக் பத்திரிகை உலகத் தலை வர்களிடையே யாருக்கு ஆதரவு அதிகம் என்ற கணக்கெடு ப்பை நடத்தியது. இப்போட்டியில் 10 தலைவர்களை கணக்கில் எடுத்துக் கொண்டு ஆய்வு நடத்தினர். அதில் பிரதமர் மன் மோகன்சிங் முதலிடம் பெற்றார்.

தொடர்ந்து நடந்த சிறந்த நாடுகள் குறித்த மற்றொரு கருத்து கணிப்பில் இந்தியா 78 ஆவது இடத்தில் இருப்பதாகவும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (6-2)

## இந்திய உதவியை ஏற்றுக் கொள்ளவும்

### பாகிஸ்தானுக்கு அமெ.வலியுறுத்து

பாகிஸ்தானில் ஏற்பபட்ட வரலாறு காணாத வெள்ளத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சரை தொடர்பு கொண்டு இந்தியா 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி அளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை இந்தியாவின் நிதியுதவியை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மற்ற உலக நாடுகளுக்கு நிதியுதவி அளிக்குமாறு பாகிஸ்தான் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது. இதேவேளை இந்தியா அளித்துள்ள நிதியுதிவியை ஏற்றுக் கொள்ளுமாறு அமெரிக்கா பாகிஸ்தானை வலியுறுத்தியுள்ளது. (6-2)



காஷ்மீர் மாநிலம் லே பகுதியில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் மன்மோகன் சிங் பார்வையிட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அருகில் ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா.



யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவருடனான சந்திப்பில் கலந்து கொண்ட திணைக் களத் தலைவர்கள் மற்றும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் சியாவோ யூசாவோ ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# தம்புள்ளயில் நேற்றுக் கடும் மழை; இலங்கை-நியூசிலாந்து மோதல் இன்று



முத்தரப்பு ஒருநாள் தொடரில் தம்புள்ளயில் நடைபெறவிருந்த இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 4-வது போட்டி மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

எனினும் இப்போட்டி மேலதிக நாளான இன்று நடைபெறவுள்ளது. இலங்கை, இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் தம்புள்ளயில் நடைபெற்று வருகின்றது.

இத் தொடரில் 4-வது போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோத இருந்தன. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

எனினும் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக மழை பெய்ய ஆரம்பித்தமையால் ஆட்டம் தாமதமானது. தொடர்ந்து மழை நீடித்ததால் நேற்றைய போட்டி ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

இந் நிலையில் மேலதிக நாளான இன்று போட்டி மீண்டும் நாணயச் சுழற்சி மேற்கொள்ளப்பட்டு நடைபெறும். இதேவேளை நேற்று நடைபெறவிருந்த போட்டி சர்வதேச ஒருநாள் போட்டி வரலாற்றில் நடைபெறும் ஆயிரமாவது பகல்-இரவுப் போட்டியாக இருந்தது.

எனினும் மழையால் ஆட்டம் கைவிடப்பட இன்று அந்தப் பதிவு இடம்பெறும்.

# ஐ.சி.சி. விருது வழங்கும் விழா எதிர்வரும் 6 ஆம் திகதி பெங்களூரில்

(டுபாய்)

ஐ.சி.சி. விருதுகளுக்கு இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர், அணித் தலைவர் தோனி, அதிரடி வீரர் சேவாக் உள்ளிட்ட வீரர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கிரிக்கெட் அணியில் சிறந்து விளங்கும் வீரர்களை ஊக்குவிக்கும் விதமாகச் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் ஆண்டுதோறும் விருது வழங்கும் விழா நடத்தப்படும்.

இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா எதிர்வரும் 6 ஆம் திகதி பெங்களூரில் நடக்கின்றது. இந் நிகழ்ச்சியில் சிறந்த கிரிக்கெட் வீரர், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த வீரர் என 7 விதமான விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் இந்தியாவின் சச்சின், தோனி, சேவாக், இலங்கையின் மஹேல ஜெயவர்த்தனா, அவுஸ்திரேலியாவின் பொன்டிங், வோட்ஷன், தென்னாபிரிக்காவின் கலிஸ், அம்லா உள்ளிட்ட 8 வீரர்கள் மூன்று விதமான விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

வளர்ந்து வரும் இளம் வீரர்களுக்கான விருதுக்கு இந்தியா சார்பில் விராட் கோலியின் பெயரும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த இருபது-20 வீரர்களுக்கான விருதுக்கு இந்தியா சார்பில் சுரேஸ் ரெய்னாவின் பெயர் இடம்பெற்றுள்ளது.

பெண்களுக்கான சிறந்த கிரிக்கெட் வீராங்கனை விருதுக்கு இந்தியாவின் மிதாலி ராஜ், கவுகர் சுல்தானா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஐ.சி.சி. தலைமை அதிகாரி ஹாரூன் லார்கட் கூறுகையில், 7-வது ஐ.சி.சி. விருது வழங்கும் விழா பெங்களூரில் எதிர்வரும் 6 ஆம் திகதி நடக்கின்றது.

இவ் விழாவில் வழங்கப்படும் விருதுகளுக்கான வீரர்களின் பட்டியலை முன்னாள் மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் கிளைவ் லாய்ட் தலைமையிலான ஐந்துபேர் கொண்ட குழு பரிந்துரை செய்துள்ளது.

இம்முறை ஒரு விருது ஒன்-லைன் மூலம் இரசிகர்கள் தேர்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையம் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சர்வதேச லயன் கழகங்களின் மாவட்ட சுகாதார இணைப்பாளரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் உப தலைவருமான வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா கலந்து கொள்கின்றார். (ச-3)

## கிறிஸ்தவ சேவாச்சிரம 71 ஆவது ஆண்டு விழா

கிறிஸ்தவ சேவாச்சிரமத்தின் 71 ஆவது ஆண்டு விழா நாளையும்,நாளை மறுதினமும் காலை 6.30 மணிக்கு திருவிருந்து வழிபாட்டுடன் ஆரம்பமாகும். இவ்வாண்டு விழா தினங்களில் கடந்தகால ஆச்சிரம வாழ்க்கை வரலாறு, கலந்துரையாடல், மக்கள்மன்றாட்டு, கதாப்பிரசங்கம், மரம் நாட்டுதல், கலை நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (ச)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு யாழில் இரண்டு கட்டமாக நடைபெறும்

## எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று வரும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இம் மதிப்பீட்டுப் பணிகள் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெறுகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நடைபெற்று வரும் க.பொ.த.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரண்டு கட்டங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதல் கட்டமாக எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை யாழ்.மத்திய கல்லூரியில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரி மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

அத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் இரண்டாம் கட்டமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதனால் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மூன்றாம் தவணைக்காக அடுத்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணி அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நெல்லியடி வட இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ்.இந்து மகளிர் கல்லூரியும் நெல்லியடி வட இந்து மகளிர் கல்லூரியும் மூன்றாம் தவணைக்காக அடுத்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ச-5)

# முஸ்லிம் மக்களுக்கு மாதிரிக் கிராமம் அமைப்பதை எவராலும் தடுக்க முடியாது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

முஸ்லிம் மக்களுக்கான மாதிரிக் கிராமம் அமைக்கப்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

இதையும் மீறித் தடுக்கும் முயற்சியில் யாராவது தமிழர்கள் ஈடுபட்டால் அதை எதிர்கொள்வதற்கு நான் ஒரு முதலமைச்சராக இன்றி பழைய பிள்ளையானாக மாற வேண்டி வரும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பிறந்த தினத்தையொட்டி மட்டக்களப்பு ஆரையம்பதியிலுள்ள ஆரையம்பதி சமூக அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் முதலமைச்சரை வரவேற்று வாழ்த்துவதற்காக ஒருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி விழாவின் போது குறித்த அந்த அமைப்பினால் முதலமைச்சரிடம் தங்களின் கோரிக்கையடங்கிய ஒரு மகஜரும் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரை வாசித்து முடித்தபின் முதலமைச்சர் அங்கு உரையாற்றினார். முஸ்லிம்களுக்காக மாதிரிக் கிராமம் அமைக்கப்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

இதையும் மீறி தடுக்கும் முயற்சியில் யாராவது தமிழர்கள் ஈடுபட்டால் நான் ஒரு முதலமைச்சராக இன்றி பழைய பிள்ளையானாக மாற வேண்டி வரும் என்றார்.

முதலமைச்சர் உரத்த குரலில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அப்போது அங்கிருந்த அந்தக் கிராம மக்களுக்கு அதிர்ச்சியாகவும் மிகவும் கவலையாகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆரையம்பதிக்கு மேற்கேயுள்ள காங்கேயன் ஓடைக்கும் மாவிலங்கத்துறைக்குமிடையில் உள்ள தமிழர்களின் காணியில் முஸ்லிம்களுக்கென ஒரு மாதிரிக் கிராமம் அமைக்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தித் தமிழர்களின் காணியை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அந்த மகஜரில் இருந்ததாகக் கூறப்பட்டது. (ச-5)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

(வேலணை)

தீவகக் கல்வி வலயத்தில் கடமை நிறைவேற்று பிரதிக்கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்), பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மாணவர் அபிவிருத்தி), கோட்டக் கல்விப் பணிப்பாளர் (காரைநகர்) ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர்கள் தீவகக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 3 வருடகால சேவை ஆற்றக்கூடிய வயதெல்லை உடையவராகவும் இலங்கை அதிபர் சேவை தரம் 1 அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 உடையவராகவும் இருத்தல் வேண்டும். இலங்கை அதிபர் சேவை 1 போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடத்து இ.அ.சே. 2-1 ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் சேர்த்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச)

# 'எங்கு போய் முறையிட்டாலும்...

நாட்டை பயங்கரவாதிகளிடமிருந்து காப்பாற்றிய யுத்த வீரருக்குரிய பதக்கம் பதவிகள் பறிக்கப்பட்ட அவர் சிறையில் வாடும் நிலையில் நாட்டினை பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் தள்ளிவிட்ட கே.பி.போன்ற பயங்கரவாதத் தலைவர்கள் போற்றப்படுவதாக ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, அநுர குமார திஸாநாயக்க, விஜித ஹேரத், டிரான் அலஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த ஜனநாயக தேசிய முன்னணித் தலைவர் சரத் பொன்சேகா,

**நீதித்துறையில் நம்பிக்கையில்லை**

இந்த நாட்டிலே சட்டத்தின் ஆட்சி சுயாதீனமாக இயங்கவில்லை என்பது சகலரும் அறிந்த ஒன்று. நீதிமன்றங்கள் மற்றும் சட்டங்கள் என்பன குடும்பத்தாரின் நன்மைக்காகவே உழைக்கிறது. ஜனாதிபதி மகிந்த நீதிமன்றங்களில் தமது அழுத்தங்களைச் செலுத்தி வருகின்றார். இதன் அடிப்படையிலேயே என் மீதான இராணுவ நீதிமன்றத் தீர்ப்பும் அமைந்துள்ளது.

இலங்கையின் நீதித்துறை மீது தனக்கு நம்பிக்கையில்லையென்றாலும் என்மீது விதிக்கப்பட்டுள்ள தீர்ப்பை நான் மேல் முறையீடு செய்யப்போகிறேன்.

எங்கு போய் முறையிட்டாலும் எனக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பது எனக்கு நூறு வீதம் தெரியும் அது பற்றி எங்களுக்கு கவலையில்லை எது வந்தாலும் எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

பாதுகாப்புச் செயலரின் மனோபாவம் எப்படிப்பட்டது என்று எனக்கு நன்றாகத் தெரியும் அவர்கள் எப்படிப் பதில் தருவார்கள்; அவர்கள் எப்படிப் பழிவாங்குவார்கள்; அவர்கள் எனக்கு என்னவெல்லாம் செய்வார்கள் என்பது பற்றி யோசித்த பின்னர் தான் நான் எனது இராணுவ சீருடையே களைந்திருந்தேன்.

இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதில்லை என நான் அன்றே கூறிவிட்டேன். இந்தத் தீர்ப்பிற்கு அமைய எனது பதவிகள் பட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் என்பன பறிக்கப்பட்டுள்ளதாகவும் அறிந்துகொண்டேன். இது எப்படிச் சாத்தியமாகும்? ஒருவர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் அவரின் பதவி பறிக்கப்படலாமா? இது நடைமுறைக்கு சாத்தியமாகுமா?

**கே.பி. போற்றப்படுகின்றார்**

நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து காப்பாற்றிய யுத்தத் தளபதி பதக்கம், பதவிகள் பறிக்கப்பட்டு சிறையில் வாடும் நிலையில், நாட்டினை பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் தள்ளிவிட்ட கே.பி. போன்ற பயங்கரவாதத் தலைவர்கள் போற்றப்படுகின்றனர்.

நான் இந்த நாட்டில் நிலைகொண்டிருந்த பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்தவன். ஆனால் கே.பி. இந்த நாட்டிலே பயங்கரவாதத்தை தோற்றுவித்தார். பயங்கரவாதத்தை தோல்வியடையச்செய்த நான் தேர்தலில் நின்ற காரணத்தால் சிறையில் தள்ளப்பட, கே.பியோ அரச மரியாதையுடன் வாழ்கிறார். அது மாத்திரமன்றி இராணுவ அதிகாரிகள் கே.பியிடம் அனுமதி பெற்று வணங்கிச் சென்றுவரும் நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**அசாதாரண சூழல் வரலாம்**

நான் எனது நிலைப்பாட்டில் அன்றும் சரி இன்றும் சரி உறுதியாகவே இருக்கிறேன். அது போலவே கே.பியும் உறுதியாக இருக்கலாம். அதாவது விடுதலைப்புலிகள் சார்பில் மிகவும் முக்கியம் வாய்ந்த அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.

எனவே அவர் அவர்களின் கொள்கை அடிப்படையில் மாறாமல் இருக்கலாம். அப்படி அவர் மாறாமல் இருப்பாரானால் கோத்தபாய கொடுக்கும் இந்த கேக் துண்டுக்கு அவர் மசிவார் என எண்ணிவிட முடியாது.

எனவே கே.பியின் வலையில் இலங்கை அரசாங்கம் சிக்கியுள்ளது என்றும் இதனால் இலங்கையில் மீண்டும் ஒரு அசாதாரண சூழல் ஏற்படலாம் எனக் கூறினார்.

**கொள்கைகள் வேறு**

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்படுவீர்களா? என ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் வேறு தமது கொள்கைகள் வேறு. தமது கொள்கைகளை தாம் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளதாகவும் இதே கொள்கையின் அடிப்படையிலேதாம் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதாகவும் ஆகவே தீமது கொள்கைக்கு ஏற்ப ஐக்கிய தேசியக்கட்சியினர் அவர்களின் கொள்கைகளை மாற்றிக் கொண்டால் தாம் அவர்களுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து இரண்டு வாரங்கள் கழித்து கைது செய்யப்பட்டிருந்த பொன்சேகா இராணுவத் தடுப்புக்காவலில் இருந்து வருகிறார்.

தேசத்துரோகம் தொடங்கி ஊழல் வரையில் என்று பலவிதமான குற்றச்சாட்டுகளின் பேரில் இராணுவ நீதிமன்றிலும் சிவில் நீதிமன்றங்களிலும் அவருக்கு எதிராக பல்வேறு வழக்குகள் நடந்து வருகின்றன.

இராணுவத்தில் இருந்தபோதே அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவ நீதிமன்றத்தில் நடந்த முதல் வழக்கில் குற்றம் உறுதிசெய்யப்பட்டு தண்டனையாக சரத் பொன்சேகாவின் இராணுவ அந்தஸ்த்துக்களும் பதக்கங்களும் அண்மையில் பறிக்கப்பட்டிருந்தன.

இராணுவத்திலிருந்த சமயத்தில் ஊழலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் மீதான இரண்டாவது இராணுவ நீதிமன்ற வழக்கின் அடுத்த விசாரணை நாளை சனிக்கிழமை நடக்கவுள்ளது.

இராணுவத்தை விட்டு ஓடிப்போனவர்களைப் பயன்படுத்தினார், தேச இரகசியங்களை வெளியில் கசியவிட்டார் என்ற குற்றச்சாட்டுக்களும் அவர் மீது உள்ளது. இவற்றில் சில குற்றங்களுக்கு இருபது ஆண்டுகள் வரையில் கூட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## மோதிரம் விழுங்கிய குழந்தை வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

நேர்த்திக்கடன் முடித்து வீட்டுக்குத் திரும்பிய குழந்தை மோதிரத்தை விழுங்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வேலணை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நே.ஜன்சிகா என்ற ஆறுமாதக்குழந்தையே மோதிரத்தை விழுங்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு சென்று மொட்டையடித்து நேர்த்திக்கடனை நிறைவேற்றியபின் வீட்டுக்குத் திரும்பிய குழந்தை தான் அணிந்திருந்த மோதிரத்தை கைசூப்பும்போது விழுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## கருணா ஊடா...

கட்சி ஆட்சி வகித்த காலத்தில் இரண்டு அமைச்சர்கள் கருணாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருணா ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கு நாட்டம் காட்டியதாகவும், இயக்கத்தில் ஏற்பட்ட எதிர்ப்பலை இதனை மேலும் வலுப்படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## கோத்தபாய...

கண்டித்திருந்ததாக அமெரிக்க செய்தித்தாள் குறிப்பிட்டிருந்ததை பத்திரிகையாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் அதற்குப் பதிலளித்த பான்கீ மூனின் பேச்சாளர் மாட்டின் நெசர்க்கீ, அந்தச் செய்தியை தாம் பத்திரிகை மூலம் தெரிந்து கொண்டதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் தாம் அது தொடர்பில் கருத்துக் கூற விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழு இன்னும் தமது அமர்வுகளை ஆரம்பிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள மார்ட்டின் நெசர்க்கீ, அமர்வுகள் விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிவித்துள்ளார். (ச-5)

## முச்சக்கர...

வண்டி மோதி படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார். (ச-5)

## மேர்வினுக்...

ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை சமர்பிக்க உள்ளார்கள். இதற்காக அவர்கள் இன்று கொழும்பில் ஒன்று கூடி ஆராயவும் உள்ளார்கள்.

இதேவேளை ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை மரத்தில் கட்டி வைத்து தண்டனை வழங்கியமை தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்ய அமைக்கப்பட்டுள்ள குழு இன்று முதல் தடவையாக கூடவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தல்லமையகத்தில் இந்தக் குழு கூடவுள்ளது. (ச-5)

## விசாரணைகளின்றி விளக்க...

முன்தினம் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தலைமையில் பிற்பகல் 2.00மணிக்குஅமர்வு ஆரம்பமாகியது. ஆணைக் குழுவின் தலைவருடன்ஏனைய ஆறு உறுப்பினர்களும் அமர்வில் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த ராஜன் ஆசீர்வாதம், கடந்த வருடமே மாதம் வரை தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை நியாயப்படுத்த முடியும் ஆனால் தற்போதைய நிலைமையில் அவர்களை விடுவிக்கலாம் அல்லவா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்ய முடியும் என்று கருதுகின்றோம்.

கடந்த வருடம் மே மாதம் யுத்தம் முடிபடைந்தது. அதற்கு முன்புவரை இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தமைக்கு நியாயம் இருக்கலாம். தற்போது அவர்களை விடுவிக்கலாம் தானே. அவர்கள் அடிக்கடி உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர். உண்ணாவிரதம் மேற்கொண்டு இறப்பதன் மூலம் எதனை சாதிக்கப் போகின்றீர்கள் என்று நாங்கள் அவர்களிடம் வினவினால் சிறைக்குள் வாழ்வதன்மூலம்எதனை சாதிக்கப் போகிறோம் என்று அவர்கள் எங்களிடம் வினாவுகின்றனர்.

மேலும் கடந்தகாலங்களில் கைது செய்யப்பட்ட சிலர் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் இல்லாமல் உள்ளது. எனவே அவ்வாறானவர்களின் குடும்ப உறவினர்கள் அவர்கள் தொடர்பான விபரங்களை எதிர்பார்க்கின்றனர். அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா இல்லையா என்பது தொடர்பான தகவல்களையாவது வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். காரணம் ஒரு வேளை உயிருடன் அவர்கள் இல்லாவிடின் மத அனுஷ்டானங்களை நிறைவேற்ற வேண்டிய தேவை உறவினர்களுக்கு உள்ளது என்றார். (ச-5)


**தவறிவிட்டது**

மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு NP-MG-8364 ஏ-9 வீதியில் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தரவும்.

0778264731
0779103584 (C-901)

**PHYSICS A/L 2012**

அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம்: 21.08.2010 சனி
(5.00 - 6.00 PM)
ஆசிரியர்: திரு. ம.ஸ்டீவன்மன் (B.Sc)
(உரியகாலத்தில் பாடத்திட்டம் முடிக்கப்படும்)
இடம் : M S CENTRE
No.18,மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரியகோவிலுக்கு அருகாமை)
(2195)

**A/L ICT, GIT மற்றும் O/L ICT**

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
குளோபல் தகவல் தொழில்நுட்பம்.
புலோலி,மந்திகை.
தொடர்பு : 0787929902
(2207)

**PHYSICS A/L 2011**

புலங்கள்
(4-ம் தவணைக்குரியது)
ஆரம்பம்: 21.08.2010 சனி (4-5PM)
ஆசிரியர்: திரு. ம.ஸ்டீவன்மன் (B.Sc)
(உரியகாலத்தில்பாடத்திட்டம்முடிக்கப்படும்)
இடம் :NEW SCIENCE CENTRE
(JAFFNA TOWN)
Group Class அமைப்பதற்கு 10 பேர் கொண்ட மாணவர்குழு போதுமானது.
(2195)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்** **90% Scholorship**

**Diploma Courses...**
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing,
*Web Designing * Video Editing *AutoCAD *VB.net, LINUX, ICT, GIT, Kids Programs

**International Courses...**
Computer Engineering-USA, CIMA-UK, IELTS / Toefl, Cisco-CCNA, CCNP, ICDL-CAD, BCS,
Sun Java programmer-SCJP, Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo

**Free** ICDL, Hardware, English, Internet & Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 25.08.2010
(C-900)

MCS 324, Palaly Road, Parameswara Junction
Web site : www.mcsitcampus.org
Call 772395895

**பெற்றோர்களே!**

முடிந்துவிட்டது என்று ஏமாற்றம் வேண்டாம்! வந்துவிட்டது.

**தரம் 05**

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு இறுதிநேரத்தில் முற்றிலும் எதிர்பார்க்கக்கூடிய 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்.

120 /-

18.08.2010 வலம்புரியில் வெளியாகிய எமது விளம்பரத்தில் வினாத்தாள் பெற்றுக் கொள்ளும் புத்தகசாலைகளின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளது.

2010-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள். வெற்றி நிச்சயம்



கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு TP.:0778448763, 0213216922
(2208)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.